இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTRE
வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 241 | சனி, ஜூலை 01, 2023 | 14 பக்கங்கள்


# மேய்ச்சல் தரையை பயன்படுத்தி இடம்பெறும் காணி அபகரிப்பு



அரியநேத்திரன் செவ்வி

# நீதிமன்ற விடுதலைக்குப் பிறகும் சிறையா?




# வக்னர் குழுவின் ஆயுத நடவடிக்கை விடை தெரியாத வினாக்கள்



வேல்ஸ் இல் இருந்து: அருஸ்


© 2023 இலக்கு இணையம்

# வடக்கை நோக்கி செல்லும் பௌத்த மத குருமார்கள்



ருவென்வெலிசாய விகாரையில் இருந்து வவுனியாவில் உள்ள விகாரை நோக்கி பௌத்த மத குருமார்கள் பாதயாத்திரை ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அனுராதபுரத்தில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ருவென் வெலிசாய விகாரையில் கடந்த 28 ஆம் திகதி கல்காமு சாந்த போதி பௌத்த மதகுரு தலைமையில் ஆரம்பமான குறித்த பாதயாத்திரையானது வவுனியா கண்டி வீதியில் உள்ள விகாரையை வந்தடைந்தது.

அங்கிருந்து வவுனியாவில் தமிழர் பகுதியைக் கையகப்படுத்தி குடியேற்றம் செய்யப்பட்ட கால போகஸ்வேவ பகுதியில் உள்ள சபுமல்கஸ்கட விகாரையை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# விரைவில் மிகப்பெரும் பொருளாதார வீழ்ச்சி - எச்.எஸ்.பி.சி

அமெரிக்காவின் பொருளாதாரம் மிக வேகமாக வீழ்ச்சி கண்டு வருகின்றது. இந்த ஆண்டின் நான்காவது காலாண்டு பகுதியில் அது பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கலாம். அடுத்த ஆண்டில் மேற்கத்திய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சி காணலாம் என பிரித்தானியாவை தளமாகக் கொண்ட எச்.எஸ்.பி.சி என்ற வங்கி கடந்த செவ்வாய்க்கிழமை (27) தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் நடுப் பகுதிக்கான பொருளாதார அறிக்கை தற்போது வெளியிடப் பட்டுள்ளது. அதில் பல நாடுகளின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது தெரியவந்துள்ளது. அமெரிக்கா



வின் பொருளாதாரம் மந்த நிலையை அடைந்துள்ள அதே சமயம் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரமும் அதன் பின்னால் செல்கின்றது.

எனினும் உலகின் சில நாடுகளின் பொருளாதாரம் தற்போதைய நிலையை தாக்குப்பிடிக்கும் நிலையில் உள்ளது என இந்த வங்கியின் உலக நாடுகளின் நடவடிக்கைக்கான தலைவர் ஜோசப் லிற்றில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாண பிராந்திய காவல்துறை பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இவ் வருடம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

2022 ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், காவல்துறை பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் 06 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு சிறுவர்களுக் கெதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

எனினும், 2023 ஜனவரி மாதம் முதல் மே மாத இறுதிவரை பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 04 முறைப்பாடுகள் பதிவு செய்யப் பட்டுள்ளதோடு கடந்த ஐந்து மாதங்களில் சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப் பட்டுள்ளன.

காவல் நிலையங்கள் முறையே யாழ்ப்பாணம் 06,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இரசாயனங்களைக் கொண்ட இந்தியாவின் இருமல் மருந்து

உபகிஸ்த்தான் நாட்டில் 19 சிறுவர்களின் உயிரை பலி கொண்ட இந்திய நிறுவனத்தின் இருமல் மருந்தில் மனிதர்களுக்கு ஒவ்வாத தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இராசாயணங்கள் இருந்ததாக த றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



இந்தியாவின் உத்தர பிரதேசத்தை தளமாகக் கொண்ட *Marion Biotech* என்ற நிறுவனம் தயாரித்த இருமல் மருந்தில் நச்சுத் தன்மையுள்ள நீர் உறைவதை தடுக்கும் இரசாயணப் பொருள் பயன்படுத்தப்பட்டதால் அதனை உட்கொண்ட 19 சிறுவர்கள் கடந்த வருடம் உயிரிழந்திருந்தனர்.

இந்த மருந்தில் பயன்படுத் தப்பட்ட *propylene glycol* என்ற இரசாயணப்பொருள்புதுடில்லியை தளமாகக் கொண்ட *Maya Chemtech India* என்ற நிறுவத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிறுவனம் மருந்து நிறுவனங்களுக்கு இரசாயணப் பொருட்களை விற்பனை செய்யும் அனுமதியை கொண்டதல்ல. அது தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யும் அனுமதியையே கொண்டுள்ளது.

இந்த இரசாயணப் பொருள் வர்ணப் பூச்சுக்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தனிநாட்டு பிரகடனத்தின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய ஸ்கொட்லாந்து ஆர்வம்

பிரித்தானியாவில் இருந்து ஸ்கொட்லாந்து தனிநாடாக பிரிந்து சென்ற பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையவுள்ளதாக அதன் முதல் அமைச்சர் ஹம்சா யூசாப் தெரிவித்துள்ளார்.




2014 ஆம் ஆண்டு இடம் பெற்ற தனிநாட்டுக்கான வாக் கெடுப்பில் மிகவும் குறுகிய வாக்கு வித்தியாசத்தில் ஸ்கொட்லாந்து தோல்வி கண்டபோதும், மீண்டும் தனிநாட்டுக்கான வாக் கெடுப்பை நடத்துவதற்கு ஸ்கொட் லாந்தின் அரசியல் கட்சிகள் முயன்றுவருகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பு 2016 ஆம் ஆண்டு இடம்பெற்றபோது ஸ்கொட்லாந்து மக்கள் 62 வாக்குகளை எதிராக அளித்திருந்த னர். எனவே 2016 ஆம் ஆண்டு

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

# ரஸ்யாவில் இருந்தே அதிக எண்ணை இறக்குமதியை இந்தியா மேற்கொள்கின்றது

ரஸ்யா இந்தியாவிற்கான எண்ணை ஏற்றுமதியில் ஏறத்தாள 50 விகிதத்தை கடந்த மே மாதம் எட்டியிருப்பதாக த புளூம்பேர்க் ஊடகம் கடந்த புதன்கிழமை (28) தெரிவித்துள்ளது.

மேற்குலக நாடுகள் ரஸ்யா மீது தடையை மேற்கொள்வதற்கு முன்னர் இந்தியாவின் இறக்குமதி 2 விகிதமாகவே இருந்தது. இந்தியா வின் எண்ணை இறக்குமதியின் பெரும்பகுதியை முன்னர் மேற் கொண்டுவந்த மத்திய கிழக்கு நாடு கள் தற்போது பின்தங்கியுள்ளன.

உக்ரைன் மீதான போர் ஆரம்பமாகிய போதே தனது எரிபொருளை குறைந்த விலையில் இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு ரஸ்யா முன்வந்திருந்தது. ரஸ்யாவின் எண்ணைக்கு பரல் ஒன்றிற்கு 60 டொலர்களை கட்டுப்பாட்டு விலையாக மேற்குலக நாடுகள் விதித்தபோதும், இந்தியா 68 டொலர்களாக கொள்வனவு




செய்து வருகின்றது. ஆனால் சவுதி அரேபியா பரல் ஒன்றை 86 டொலர் களுக்கு விற்பனை செய்கின்றது.

சீனாவும் பெருமளவான எண்ணையை ரஸ்யாவில் இருந்து இறக்குமதி செய்துவருகின்ற போதும், அமெரிக்காவுடன் நட்புற வில் இருக்கும் இந்தியா அதி களவான எண்ணையை இறக்குமதி செய்வது பேசு பொருளாகியுள்ளது. எனினும் அதிக சல்பர் கொண்ட மசகு எண்ணைகளை சுத்திகரிக்கும் தொழில்நுட்பம் இந்தியாவிடம் இல்லாதது மிகப்பெரும் குறை பாடாக கருதப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் ரஸ்யா வின் மிகப்பெரும் எண்ணை ஏற்று மதி நிறுவனம் இந்தியன் எண்ணை நிறுவனத்துடன் உடன்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவுடனான பாதுகாப்பு உடன்பாட்டை மீளாய்வு செய்யும் சொலமன் தீவுகள்

பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா மற்றும் சீனா வுக்கு இடையிலான பூகோள அரசியல் போட்டிகள் அதிகரித்து வரும் நிலையில் தற்போது அவுஸ் திரேலியாவுடனான கொண்டுள்ள பாதுகாப்புஉடன்பாட்டைமீளாய்வு செய்யப்போவதாக சொலமன் தீவுகளின் பிரதமர் மானேஸ் சொகவரே தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை (28) அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் றிச்சார்ட் மார்லீயை சந்தித்த பின்னரே அவர் இந்த



அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

சொகவரே சீனாவுக்கு செல் வதற்கு முன்னர் பாதுகாப்பு விடை யங்கள் தொடர்பாக கலந்துரையா டும் நோக்கத்துடன் மார்லீ இரண்டு நாள் பயணமாக சொலமன்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டம்:

## 'ஏதோ ஒரு பெரிய பாதிப்பு வரக்கூடும்'

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தின் போது உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனைக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதையடுத்து, உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனை நாடாளுமன்ற நிதிக்குழுவில் சமர்பிக்கப்பட்டு, இன்று சனிக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விடுமுறை நாட்களில் நடைபெறும் நாடாளுமன்ற அமர்வுகளில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துக்கொள்ளுமாறு அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் ஐந்து நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் சந்தை மூடப்படுவதன் ஊடாக, இந்த திட்டத்தை நிறைவுக்கு கொண்டு வர முடியும் என அரசாங்கம் நம்புவதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். இந்த மாதம் 30ம் திகதி விசேட வங்கி விடுமுறையொன்றையும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, அன்றைய தினமும் பங்குச்சந்தை வர்த்தகத்திற்கும் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது.



இந்த நிலையில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை மூத்த விரிவுரையாளர் எம். கணேசமூர்த்தி சர்வதேச ஊடகமான பிபிசி தமிழுக்கு வழங்கிய செவ்வியில்,"கடன் மறுசீரமைப்பு என்பது வேறொன்றும் கிடையாது. வங்கிகளிடமிருந்து அரசாங்கம் கடனை பெற்றுக்கொண்டுள்ளது. அதேபோன்று, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றிலிருந்தும் அரசாங்கம் கடனை பெற்றுக்கொண்டுள்ளது. அந்தக் கடன்களின் ஒரு பகுதியை எப்படி பதிவளிப்பு செய்யலாம் என்பதே இதன் நோக்கம்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ஏன் நீண்ட விடுமுறை தேவைப்படுகின்றது?

"கடன் மறுசீரமைப்பு செய்யப்படும் இந்தக் காலப் பகுதியில் வங்கி நடவடிக்கைகள் மற்றும் பங்குச் சந்தை நடவடிக்கைகள் செய்யப்படாமல் இருப்பது அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும். ஏனென்று சொன்னால், அடுத்து வரும் நாட்கள் மிகவும் சர்ச்சைக்குரிய நாட்களாக காணப்படுகின்றன.

"இந்தக் காலப் பகுதியில் பொதுமக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற நிலைமைக்கு மத்தியில், எங்களுடைய பணத்தை மீள தாருங்கள் என மக்கள் வங்கிக்கு சென்று கேட்டால் என்ன நடக்கும்? அதேபோன்று, பங்குச் சந்தையிலுள்ள அனைவரும், பங்குகளை விற்க தொடங்கினால் என்ன நடக்கும்? இவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதே இந்த விடுமுறை வழங்கப்பட்டமைக்கான நோக்கமாகும்."

**'ஏதோ ஒரு பெரிய பாதிப்பு வரக்கூடும்'**

மேலும் இலங்கை அரசாங்கத்தினால் அடுத்து

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# ஈழத்தமிழர் இறைமை சமமாக மதிக்கப்படாதவரை சிங்களவர் இறைமை தொடர்ந்து இழக்கப்படும்

1983 முதல் இன்று வரை யூலை மாதம் என்றதுமே 40 ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்கா தமிழர்களை இனஅழிப்பு செய்த கறுப்பு யூலை 83 என்னும் வரலாற்று நினைவுதான் ஒவ்வொரு ஈழத்தமிழர்க்கும் ஏற்படும்.

இந்த கறுப்பு யூலை ஈழத்மிழின அழிப்பினைச் சிறிலங்கா ஈழத்தமிழர்களின் சொத்துடைமைகளை அழித்து அவர்களது இறைமையை ஒடுக்கல் என்ற பொருளாதார நோக்கிலும், ஈழத்தமிழர்களை அவர்கள் செறிந்து வாழும் வடக்குக் கிழக்கை மட்டுமே அவர்களது தாயகமாக அவர்களுக்கு அடையாளப்படுத்தி வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழ்ந்த ஈழத்தமிழர்களின் நிலங்களையும் தொழில் வளங்களையும் வர்த்தக நிலையங்களையும் ஆக்கிரமிப்பின் மூலம் சிங்களவர்களுக்கு உரித்தாக்கும் போக்கிலும் நடாத்தியது.

ஈழத்தமிழர்களும் சிங்களவர்களும் இலங்கைத் தீவில் வரலாற்றுத் தாயகங்களைக் கொண்ட தேசமக்கள் என்ற உண்மையை திரிபுபடுத்தி இலங்கைத் தீவு சிங்கள நாடு பௌத்த ஆகமச் சட்டங்களுக்கு உரிய பௌத்த நாடு சிங்கள மொழி பேசுகிறவர்களுக்கு மட்டுமே உரிய நாடு என்கின்ற இனவெறி மதவெறி மொழிவெறி அரசியலை 1958ம் ஆண்டின் ஈழத்தமிழின அழிப்பின் 25வது ஆண்டு இனப்படுகொலை விழாவாகச் சிறிலங்கா 1983 ஆடியில் வெளிப்படுத்தியது.

ஐக்கிய நாடுகள் சபை சிறிலங்காவின் இந்த இனஅழிப்பின் மூலம் ஈழத்தமிழரின் இறைமையை ஒடுக்கல் என்கின்ற சிறிலங்காவின் அரசியல் கொள்கை கோட்பாடுகளை அனைத்துலகச் சட்டங்களின் கீழ் தண்டிக்காமலும் கண்டிக்காமலும் விட்டதன் விளைவாகவே 2009 இல் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பை ஒரு தேசத்தையே இனஅழிப்புக்கு உள்ளாக்கிய உலக வரலாறாக 146000 ஈழத்தமிழ்க்குடிகளை இனப்படுகொலை செய்து 31 ஆண்டுகளாக நடைமுறையரசாக வளர்ந்து சட்டரீதியான அரசாக உலகநாடுகளின் ஏற்புடைமை பெறும் நிலைக்கு முன்னேறிக் கொண்டிருந்த ஈழத்தமிழர்களின் நடைமுறையரசை சிறிலங்கா படைபல ஆக்கிரமிப்புச் செய்து இன்று வரை ஈழத்தமிழர்களை படைபலத்தின் மூலம் ஆட்சிபுரியும் பாராளுமன்றக் கொடுங்கோன்மையரசாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இன்று சிறிலங்காவின் யூலை ஈழத்தமிழின ஆடிஇனஅழிப்பின் 40வது ஆண்டில் ஈழத்தமிழ் மக்கள் வாழ்கின்ற நிலையிலும் அதே இனவெறி மதவெறி மொழிவெறிப்போக்கில் எந்த ஒரு சிறு மாறுதலும் கூட இல்லாமல் ஒரே நாடு சிங்கள நாடு ஒரே சட்டம் பௌத்த ஆகமச் சட்டம் என்ற ராசபக்ச குடும்பத்தினரின் ஈழத்தமிழின இறைமை மறுப்பு அரசியலை அவர்களின் கைப்பொம்மை அரசின் அரசத்தலைவராக உள்ள ரணில் விக்கிரமசிங்கா சிறிலங்காவுக்கான புதிய அரசியலமைப்பை வடிவமைக்கும் முயற்சி ஊடாக வெற்றிகரமாகச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

சிறிலங்கா ஈழத்தமிழர்களின் இறைமையை மதிக்காது தனக்கு பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் ஈழத்தமிழர்களின் விருப்பினைப் பெறாது அவர்களின் இறைமையைச் சிங்களப் பெரும்பான்மையினரின் இறைமையுடன் இணைத்து ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சிக்கு உட்படுத்தியதால் உருவான காலனித்துவ காலப் பிரச்சினையாகச் சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சி இன்றுவரை ஈழத்தமிழர்களை இனஅழிப்புக்கு உட்படுத்தி அவர்களின் இறைமையை ஒடுக்க முனைந்து வருகிறது. இதற்குப் பலவழிகளிலும் துணைநின்று சிறிலங்காவின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாத்து வரும் இந்தியா தற்போது அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிராக ஈழத்தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி அவர்களை அவர்களுக்கான அரசியல் எதிர்காலத்தை உருவாக்க விடாது தனது 36 ஆண்டுகளுக்கு முன்னதான இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 13வது திருத்தம் என்கின்ற நிர்வாகப் பரவலாக்கல் தீர்வு முறையினை தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கான தனது தீர்வாக இன்று வெளிப்படுத்தி நிற்கிறது. சிறிலங்கா தனது 1978ம் ஆண்டின் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 17 வது அத்தியாயமான நிதி என்னும் அத்தியாயத்திற்கு ஆ பிரிவை இணைத்து அதில் நிதிப்பரவலாக்கத்தைத் தனது ஒன்பது மகாணங்களுக்கும் செய்வதற்கான மாகாணசபைகளை நிறுவும் முறைகளை அமைத்துக்கொண்டது. பின்னர் ஒன்பதாம் அட்டவணை மூலம் நிரல் I இல் மாகாணசபை நிரலில் மாகாணசபைக்கான பொலிசும் பொது ஒழுங்கும், சட்டமும் ஒழுங்கும், காணியும் காணிக்குடியேற்றமும், கல்வி என்பவற்றை மாகாணசபை எந்த அளவுக்கு தனதாகச் செயற்படுத்தலாம் என்பதை வரையறுத்தது. பின்னர் நிரல் II இல் ஒதுக்கிய நிரலால் பாதுகாப்பும் தேசிய பாதுகாப்பும் உள்நாட்டுப் பாதுகாப்புக் குறித்தும் நிரல் III இல் திட்டமிடலுக்கான ஒருங்கியை நிரலையும் கட்டமைத்து நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் நேரடி நிர்வாகத்தில் அவரால் நியமிக்கப்படும் மாகாண ஆளுநர்களின் கீழ் செயற்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாணசபை மூலம் அந்த அந்த மாகாணங்களுக்கான நிர்வாகத்தை மேற்கொள்வதற்கான நிர்வாகப் பரவலாக்க முறைமைகளையும் சட்ட ஒழுங்குகளையும் எடுத்து விளக்கியது. இந்த 13வது திருத்தம் 1987இல் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரே நிர்வாக அலகாகக் கட்டமைத்தது. ஆயினும் இன்று அந்தநிலை இல்லை. இந்த 13வது திருத்தத்தைத்தான் இந்தியா இன்று சிறிலங்காவின் 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்கான பரிகாரநீதியையும் தண்டனை நீதியையும் எதிர்பார்த்து நிற்கும் இலங்கைத் தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கான தொடக்கமாக இந்தியா முன்னெடுப்பது எந்த அளவுக்கு ஈழத்தமிழர்களுக்கு நியாயமானதும் நீதியானதுமான தீர்வாக அமையும் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

இவ்வாறாக ஈழத்தமிழர்களின் இறைமையினைச் சமத்துவமாக மதியாது சிறிலங்கா தனது அரசியலைத் தொடரும் வரை சிறிலங்காவின் இறைமையும் உலக மட்டத்தில் வீழ்ச்சியுற்று இன்று கடன் மறுசீரமைப்புக்கள் மூலம் உள்ளும் புறமும், தனது இறைமையை இழந்து 51 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன்களுக்கு கடன் மறுசீரமைப்பை செய்ய முயலும் சிறிலங்கா 14 டிரில்லியன் இலங்கை ரூபாக்களுக்கான உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் 17.1 பில்லியன் கடன் மறுசீரமைப்பை தான் மத்திய வங்கியிலும் வர்த்தக வங்கிகளிலும் சேமஇலாபநிதிகளிலும் மற்றும் தனது பிணைமுறிகளை மீளப்பெற்று குறைந்த வட்டியில் வழங்குவது மூலமும் தனியாகவோ கூட்டாகவோ இந்த முறைகளைக் கையாண்டு நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கிறது. இவை ஏதோ ஒருவகையில் இவற்றில் வைப்பிட்ட பொதுமக்களை மேலும் பொருளாதாரத்தில் பலவீனப்படுத்தும் செயற்பாடாகவே தொடரும். இந்நிலையில் ஈழத்தமிழரின் இறைமையைச் சிங்களவர்கள் சமமாக மதிக்கின்ற காலத்தை உருவாக்கும் வரை சிங்களவர்களின் இறைமையும் வீழ்ச்சியடைந்து கொண்டே செல்லும் என்னும் எச்சரிக்கையை இலக்கு சிறிலங்காவுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அதே வேளை 13வது திருத்தத்திற்கு ஆதரவு அளித்து ஊக்குவிக்க பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு மாநில தலைவர் அண்ணாமலை அவர்களை லண்டனுக்குக் கூப்பிட்டு வாழ்த்தியது போன்ற விடயங்களைச் செய்கையில் புலம்பெயர் தமிழர்கள் தங்களை அறியாமலே ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கும் செயலைச் செய்கின்றனர் என்பதையும் இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

ஆசிரியர்

# மேய்ச்சல் தரையை பயன்படுத்தி இடம்பெறும் காணி அபகரிப்பு

**காணி அபகரிப்பு - ஆக்கிரமிப்பு போன்வற்றறினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது. அங்கு தற்போது காணப்படும் உண்மை நிலை என்ன? அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களில் என்ன நடைபெறுகின்றது? என்பன தொடர்பில் தமிழரசுக் கட்சியின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உயிரோடைத் தமிழின் தாயகக் களம் நிகழ்வுக்காக வழங்கிய நேர்காணலின் முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காக தருகின்றோம்.**



## அரியநேத்திரன் செவ்வி

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை ஒன்றை தமிழரசுக் கட்சி ஆரம்பித்திருந்தது. இந்தப் பேச்சுக்களின் நிலை என்ன?**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழரசுக் கட்சி இரண்டு தடவை சந்தித்திருக்கின்றது. கடந்த 19 ஆம் திகதி அடுத்த கட்ட சந்திப்பு இடம்பெறுவதாக இருந்தாலும் கூட, ஜனாதிபதி வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டிருந்தமையால் அந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை. மீண்டும் ஒருதடவை சந்தித்தால்தான் அதன் பலாபலன்கள் எவ்வாறானதாக இருக்கும் என்பதை அறியக்கூடியதாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**இடைக்கால நிர்வாக சபை என்ற யோசனை ஒன்று ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டது. இதனை தமிழரசுக் கட்சித் தலைமை நிராகரித்திருந்தது. அதற்கு காரணம் என்ன?**

ஆலோசனைச் சபை என்ற ஒரு முன்மொழிவும், இடைக்கால நிர்வாகம் என்று ஒரு முன்மொழிவும் முன்வைக்கப்பட்டதாக அறிகிறோம். இது தொடர்பான யாழ். மாவட்ட எம்.பி. விக்னேஸ்வரனின் முன்மொழிவு அங்கு வாசிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, அங்குள்ள ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட, இடைக்கால சபை என்ற யோசனையை அவர்கள் விரும்பவில்லை. அதற்கான காரணம் என்னவென்றால், அவ்வாறான ஒரு சபை வருமாக இருந்தால் மாகாண சபைகளுக்கான தேர்தல் மேலும் தாமதப்படுத்தப்படலாம் அல்லது அதனை நடத்தாமலேயே விட்டுவிடுவதற்கு அரசாங்கம் இதனைப் பயன்படுத்தலாம் என்று தமிழ்க் கட்சிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தன.

இரண்டாவதாக இடைக்கால சபை ஒன்றை அமைப்பதாக இருந்தால், அதில் இடம்பெறும் உறுப்பினர்கள் தமிழ்த் தரப்பிலிருந்து நியமிக்கப்படுவார்களா, அல்லது அரசாங்கத் தரப்பு அதற்குரியவர்களை நியமிக்குமா என்ற கேள்வியும் எழுந்திருந்தது. இவ்வாறான இடைக்கால சபை ஒன்று எவ்வாறிருக்கும் என்பதும் தெளிவற்ற ஒன்றாகவே இருக்கின்றது. எனவே இது தொடர்பில் அடுத்த கட்டப்பேச்சுக்களின் போது தான் முழுமையான தகவல்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**ஜனாதிபதியுடனான பேச்சுக்களுக்கு தமிழரசுக் கட்சி தனியாகத்தான் சென்றிருந்தது. ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதற்கான திட்டம் ஏதாவது தமிழரசுக் கட்சியிடம் உள்ளதா?**

கடந்த 2018 இல் நடைபெற்ற உள்ளுராட்சிச் சபைத் தேர்தலின் பிரதிபலிப்புக்கள், அதில் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில்தான் நடைபெறவிருந்த உள்ளுராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்றும் தனித்தனியாகப் போட்டியிட்டால் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு கருத்தின் அடிப்படையில்தான் தனித்தனியாகத் தேர்தலை சந்திப்பது என்ற கோரிக்கை தமிழரசுக் கட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்டது.



இதனையடுத்து ரெலோ, புளொட் ஆகியன கூட்டமைப்பிலிருந்து முழுமையாகவே வெளியேறுவதாக அறிவித்தன. ஆனால், நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவும் இல்லை. எனவே அதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது என்பது எனது தனிப்பட்ட கருத்து. ஏனென்றால், தேர்தல் என்பது வேறு விடயம். ஆனால், அரசியல் தீர்வு ஒன்றை நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது நாங்கள் ஒன்றாகப் பயணிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற கட்சிகள் மட்டுமல்ல, அதிலிருந்து விலகியிருக்கின்ற கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ் வரவேண்டிய காலம் - இந்தக் காலம் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

தேர்தல் நடைபெறவில்லை என்றால், அடுத்த கட்டப் பேச்சுக்களுக்கு முன்னதாகவே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பிரிந்து சென்றவர்கள், அவர்கள் தனியாக இயங்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றார்களே தவிர, தமிழரசுக் கட்சியுடன் மீண்டும் இணைந்து செல்வதற்கான நல்லெண்ணத்தை அவர்கள் காட்டவில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

ஆனால், தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் தேர்தல் இல்லை என்பதுதான் நிலை என்றால், அடுத்ததாக என்ன செய்வது என்பதையிட்டு திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை அடுத்த மாநாட்டில் தமிழரசுக் கட்சி எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைப் பிரச்சினை தொடரும் நிலையில், அதற்கு எதிராக எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது?**

உண்மையில் மேய்ச்சல்தரைப் பிரச்சினை என்பது காலங்காலமாகத் தொடரும் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் முன்னர் ஆளுநராக இருந்த பெண்மணி, மேய்ச்சல் தரை விவகாரத்தைக் கையாள்வதற்காக மட்டுமல்ல, திட்டமிட்ட குடியேற்றங்களை முன்னெடுப்பதற்காகவே நியமிக்கப்பட்டிருந்தார். குறிப்பாக மேய்ச்சல் தரைகளை இலக்கு வைத்து வேறு மாவட்டங்களில் இருப்பவர்களை பாதுகாப்புப் படைகளின் உதவியுடன், முந்திரிகைச் செய்கை, சோழச்செய்கை என்ற பெயர்களில் கொண்டுவந்து குடியமர்த்தியிருந்தார்.

இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழரசுக் கட்சியால் முன்வைக்கப்பட்டு அதற்காக நாம் நீதிமன்றத்துக்கும் சென்றிருந்தோம். அந்த வழக்கு இப்போதும் உள்ள நிலையில் தன்னிச்சையாக இந்தக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள செந்தில் தொண்டமான், அவ்வாறு குடியேற்றப்பட்டவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை மட்டக்களப்பு ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டத்தில் எடுத்திருந்தார். இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுதாக இருந்தால், அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுவதை நாம் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

அதேவேளையில், இந்தப் பகுதியில் தமிழ் மக்களுடைய கால்நடைகளைப் பிடிப்பது, வெட்டுவது, கொல்வது என்பன சாதாரணமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுக்க முடியாத ஒரு நிலையில்தான் நாம் இருக்கின்றோம். ஏனென்று பார்த்தால் இவற்றின் பின்னணியில் பாதுகாப்புத் தரப்பினர் இருக்கின்றார்கள் என்பதை மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் பல ஆதாரங்களுடன் எமக்குத் தெரிவித்திருக்கின்றார்கள்.

எனவே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தாலும் சட்டத்தை செயற்படுத்தாமலிருப்பதுதான் தொடர்கின்றது. மேய்ச்சல் தரை விவகாரத்தில் மட்டுமல்ல, திட்டமிட்ட குடியேற்றங்களைப் பொறுத்தவரையிலும் கூட மட்டக்களப்பின் நிலை இதுவாகத்தான் இருக்கின்றது.

• • •

# வடக்கு கிழக்கில் பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் தொடர்பில் அரசு சிந்திப்பதில்லை

மட்டு.நகரான்

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை குறைப்பதற்கு ஏற்றுமதி பொருளாதாரம் மிக முக்கியத்துவம்வாய்ந்ததாக மாறியிருக்கின்றது.

இன்றைய நிலையில் ஏற்றுமதி பொருளாதாரம் என்பது இலங்கைக்கு மட்டுமன்றி இலங்கைமக்களுக்கும்முக்கியத்துவம்வாய்ந்ததாக மாற்றம்பெற்றுள்ளது.

இலங்கை அரசாங்கம் பொருளாதார வளர்ச்சி குறித்து சிந்தித்தாலும் அந்த பொருளாதார வளர்ச்சிக்கு வடகிழக்கில் ஏதாவது திட்டங்கள் குறித்து சிந்திப்பதற்குதவறியே வருகின்றது. மாறாக வடகிழக்கு மக்களுக்கு பயனற்றதும் ஏனைய மாவட்ட மக்களுக்கு பயன்தரக்கூடியதுமான திட்டங்கள் பற்றிமட்டுமே அதிகளவான கவனம் செலுத்துவதானது வடகிழக்கு மக்களுக்கு செய்யும் துரோகமாகவே பார்க்கப்படவேண்டும்.

இலங்கையிலேயே அதிகளவான வளங்களைக்கொண்ட மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது. ஆனால் கிழக்கிலிருந்து ஏற்றுமதி பொருளாதாரம் என்பது மிகவும் குறைந்தளவிலேயே இருந்துவருகின்றது. அதிலும் இந்த ஏற்றுமதி பொருளாதாரம் என்பது சிங்கள மக்கள் செறிந்துவாழும் பகுதியிலேயே அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் கிழக்கு மக்களுக்கு பிரயோசனம் குறைந்த ஏனைய பகுதி மக்கள் அதிகளவில் பிரயோசனம் அடையக்கூடிய வகையிலும் தமிழர்களின் நிலங்களை அபகரிக்கும் வகையிலும் தமிழர்களின் விரிவாக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையிலான திட்டங்களே கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இயற்கை வளம்கொண்ட காணிகள் சூரிய மின்கலத்திட்டம் என்ற போர்வையில் அபகரிக்கப்படும் நிலைமையினை இன்று காண முடிகின்றது. சூரியமின்கல திட்டத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இவ்வாறான திட்டங்கள் மிக முக்கியத்துவம்வாய்ந்ததாக காணப்படுகின்றது. எனினும் இவ்வாறான திட்டங்கள் காணிகள் பாவனைக்குள் இல்லாத பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மகாவலியுடன் இணைந்து இதற்கான காணிகள் பெறும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இதன்மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய காணிகளை அபரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டத்தில் இந்த காணி விடயத்தில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் அவர்கள் விடாப்பிடியாக இருந்ததை காண முடிந்தது.

இந்த கூட்டத்தில் கிரான் மற்றும் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சூரிய மின்சக்தி திட்டத்திற்கு இரண்டாயிரம் ஏக்கர் காணிகளை ஒதுக்குவதற்கான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த காணிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் காணிகள் தமிழர்களின் காணிகளும் சுமார் 400 ஏக்கர் காணிகள் முஸ்லிம்களின் காணிகளும் உள்ளீர்க்கப்பட்ட நிலையில் முஸ்லிம்களின் 400 ஏக்கர் காணிகள் விடுத்து தமிழ் விவசாயிகளின் காணிகள் சுமார் ஆயிரம் ஏக்கர் காணிகளை உள்ளீர்க்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன்போது அரசாங்கத்தின் அடிவருடிகள் இந்த திட்டத்திற்கு ஆதரவு வழங்கியபோதிலும் தமிழர்களின் வளமான காணிகள் மட்டும் அபகரிப்பு செய்யப்படுவதற்கு தமது எதிர்ப்பினை தெரிவித்த நிலையினை காணமுடிந்தது. இங்கு கலந்துகொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் இதற்கான எதிர்ப்பினை தெரிவிக்காத நிலையில் விவசாயிகளுக்கு மாற்றுக்காணிகளை வழங்கவேண்டும் என்பதை மட்டும் வெளிப்படுத்தியிருந்தார். இவ்வாறான நிலையில் குறித்த பகுதியில் அமையப்போகும் சூரிய மின்சார திட்டத்தினால் வாகரை மக்களோ கிரான் பிரதேச மக்களோ நன்மையடையப்போவதில்லை. ஏன் மட்டக்களப்பு மாவட்ட மக்களோ நன்மையடையப்போவதில்லை.



இவ்வாறான திட்டங்கள் கொண்டுவருவதே தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் நோக்குடன் என்பது இன்று கிழக்கு மாகாண ஆளுனர் போன்றவர்களுக்கு தெரியவாய்ப்புகள் இல்லை. ஆனால் கிழக்கு மாகாண தமிழர்களைப் பொறுத்த வரையில் அது நன்கு தெரிந்த விடயமாகும்.

இலங்கையிலேயே அதிளவு நிலப்பரப்பினைக்கொண்டதாக வாகரை பிரதேச செயலகப்பிரிவு எனப்படும் கோறளைப்பற்று வடக்கு பிரதேசம் காணப்படுகின்றது. சனத்தொகையில் வாகரைப் பிரதேசம் 7,820 குடும்பங்களில் 25348பேரைக் கொண்டுள்ளது. கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகமானது சுமார் 550 சதுர கி.மீ அல்லது மட்டக்களப்பு மாவட்டத்தின் பரப்பளவில் 20.89வீதத்தை கொண்டுள்ளது. அதன் மொத்த நிலப்பரப்பானது நீர்ப்பரப்புக்களையும் சேர்த்துப் பார்க்கும்போது கிட்டத்தட்ட 43.9 சதுர கி.மீ ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசமானது தமிழர்களின் வரலாற்றுபாரம்பரிய மிக்க பிரதேசமாகும். இங்கு வாழும் வறிய மக்கள் தான் கடந்தகாலப் போர்ச் சூழலால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். வாகரைப் பிரதேசம் சுமார் 30வருடங்களாகப் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.

இங்கு கடல்வளம், ஆற்று நீர்வளம், காட்டுவளம், நிலவளம் என அனைத்து வளங்களும் உள்ளபோதிலும் இலங்கையில் மிக வறிய நிலையில் மக்கள் வாழும் ஒரு பகுதியாக இப்பகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள வளங்கள் எந்தவிதமான அபிவிருத்தி திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படாது வெறுமனே காணிகளை அபகரிக்கும் நோக்குடனுக்கான திட்டங்களுக்கு மட்டுமே காணிகள் வழங்கப்படுகின்றன. கடந்த காலத்தில் அமைச்சராகயிருந்த எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவுக்கு பல்கலைக்கழகம் அமைப்பதற்காக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தனின் உதவியுடன் ஆயிரம் ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டன.

அங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி திட்டங்களை மேற்கொண்டு அப்பகுதி மக்கள் தொழில்துறைகளை முன்னெடுத்து தமது வாழ்வாதாரத்தினை முன்கொண்டுசெல்வதற்கு அப்பால் அங்குள்ள வளங்களை தென்னிலங்கையில் உள்ளவர்கள் பயன்படுத்துவதற்கான திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

நாங்கள் கடந்த காலத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தோம். புலம்பெயர் தேசத்தில் உள்ள அமைப்புகள், தனிநபர்கள் இங்குள்ள வளமான காணிகளை பயன்படுத்தி முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும் என்று ஆனால் அவற்றினை கருத்தில் கொள்ளாத நிலையே இன்று இருந்துவருகின்றது. இவ்வாறான நிலையானது எதிர்காலத்தில் பாரியளவில் தமிழினத்தின் அச்சுறுத்தலுக்கு பாரிய ஆபத்து என்பது உணர்வதற்கு தவறிவருகின்றனர்.

இவ்வாறானநிலையிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிகள் பொருத்தமற்ற திட்டங்கள் ஊடாக அபகரிக்கப்படும் நிலைமையினை காணமுடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் விவசாய உற்பத்தியின் ஊடாக பெறப்படும் நெல்லினை இலங்கை அரசாங்கம்முறையாககொள்வனவுசெய்யுமானால் இலங்கையானது அரிசி இறக்குமதியை செய்யத் தேவையில்லையென மட்டக்களப்பு விவசாயிகள் சுட்டிக்காட்டிவருகின்றனர். தமிழர்களின் பொருளாதாரம் வளர்ந்துவிடும் என்பதனால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் இருப்பினையும் வளர்ச்சியையும் இந்த நாட்டில் எந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இன்றைய நிலையில் ஜனாதிபதி எடுக்கும் தீர்மானத்தை கூட வடகிழக்கில் நடைமுறைப்படுத்த நிர்வாகம் பின்னடிக்கும் நிலையுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் தமிழர்களின் காணி அபகரிப்பும் மற்றும் பொருளாதார முன்னேற்றம் குறித்து சிந்திக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் கிழக்கு தமிழ் மக்களுக்கு உள்ளது.

வாகரை கிராண் போன்ற பகுதிகளில் உள்ள காணிகளை இயற்கையினை பாதிக்காத வகையில் மக்களின் பொருளாதார வளர்ச்சியைக்கொண்ட திட்டங்களுக்கு ஒதுக்கீடுசெய்யவேண்டுமே தவிர சூரியசக்தி மின்கல திட்டம் போன்றவற்றிற்கு ஒதுக்குவதனால் எதிர்காலத்தில் சூழல் பாதிப்புகளை எதிர்நோக்குவதுடன் தமிழர்களின் பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியாத சூழல்நிலை உருவாகலாம்.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் எஞ்சியுள்ள காணியிலாவது தமிழர்களின் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கான உற்பத்திகளை முன்னெடுப்பதற்கு முன்வரவேண்டும். இன்று மட்டக்களப்பில் வாழை உற்பத்திகள் முன்னெடுக்கப்படுகின்றது. அவற்றினை ஏற்றுமதிசெய்யும் வகையில் இன்று உற்பத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான உற்பத்திகளுக்கான களம் ஏற்படுத்தப்படவேண்டும். புலம் பெயர்ந்துள்ள வர்த்தக சமூகம் மட்டக்களப்பு மாவட்டத்தின் இன்றைய நிலைமைகள் குறித்து சிந்திக்க வேண்டும். இங்குள்ள உற்பத்தியாளர்களுக்கு கைகொடுக்க முன்வரும்போது எதிர்காலத்தில் மேலும் பல உற்பத்தியாளர்கள்

வடக்கு கிழ 13 ஆம் பக்கம்

# உரிமைகளும் உறுதிப்பாடும்

துரைசாமி நடராஜா

மலையக சமூகத்தினர் உரிமை மீறல்கள் பலவற்றுக்கும் உள்ளாகி வருகின்றனர். கல்வி, தொழில், இருப்பிடம் எனப்பல்வேறு துறைகளும் இதில் உள்ளடங்கும். இவ்வுரிமை மீறல்கள் காரணமாக இச்சமூகத்தினர் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்து வருவதோடு தேசிய நீரோட்டக் கனவும் கானல் நீராகி வருகின்றது. இந்நிலையில் இம்மக்களின் சகலதுறை சார் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டு தேசிய நீரோட்டக் கதவுகள் திறந்து விடப்பட வேண்டியதன் அவசியத்தினை சமூக ஆர்வலர்கள் தொடர்ச்சியாகவே வலியுறுத்தி வருகின்றனர்.

'உரிமைகள் மனித வாழ்வின் நிபந்தனை கள். பொதுவாக அவையின்றி எம் மனிதனும் சிறப்பாக செயற்பட முடியாது. இந்நோக்கங்களைஅடைந்து கொள்வதற்காகவே இயங்கும் அரசு உரிமைகளை பேணுவதன் மூலம் மட்டுமே தனது இலக்கினை அடைந்துகொள்ள முடியும் 'என்கிறார் அறிஞர் லஸ்கி. 'உண்மையான உரிமைகள் சமூக பொதுநலத்தின் நிபந்தனைகள்' என்பது அறிஞர் ஹோபஸ்ஸின் கருத்தாகும். எல்லா நிலைகளிலும் உரிமைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்த வகையில் சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்றவாறு உரிமைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக ஏட்டளவில் உரிமைகள் இருந்தபோதும் அவற்றை அனுபவிக்க முடியாதவகையில் பல சமூகத்தினர் இருந்து வருவதும் தெரிந்த விடயமாகும். அதிலும் பின்தங்கிய சமூகத்தினரிடையே உரிமை மீறல்கள் அதிகமாக இடம்பெற்று வருவதையும் அறியக்கூடியதாக உள்ளது. இந்த வரிசையில் மலையக மக்களும் உள்ளீர்க்கபட வேண்டியவர்களேயாவர்.

மலையக மக்களின் வரலாறு இந்நாட்டில் 200 வருடங்களாகி இருக்கின்றது. இந்த 200 வருட காலமும் இவர்கள் கீழ்மட்ட வாழ்க்கை நிலைமைகளையே கொண்டிருப்பது வருந்தத்தக்க விடயமாகும். இச்சமூகத்தினரைப் பொறுத்தவரையில் பல்வேறு உரிமை மீறல்கள் இடம்பெறுவதொன்றும் புதிய விடயமல்ல. இத்தகைய உரிமை மீறல்கள் இச்சமூகம் ஒடுக்கப்படுவதற்கு வலுசேர்த்துள்ளது. கல்வியுரிமை என்பது ஏனைய உரிமைகளை அனுபவிப்பதற்கான முக்கிய உரிமையாக விளங்குகின்றது. பொருளாதார சமூக பகுதிக்குள் கல்வியுரிமை உள்ளடக்குகின்றது. கல்வி உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்காக அரசு சட்ட நிர்வாக மற்றும் ஏனைய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் அனைத்து பிரஜைகளும் சமத்துவ அடிப்படையில் இவ்வுரிமையை அனுபவிப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயம் உள்ளிட்ட பலவும் வலியுறுத்துகின்றன. எனினும் மலையக மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு குறுக்கீடாக பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. வறுமை, போஷாக்கின்மை, போக்குவரத்துச் சீர்கேடு, கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச நிலைமைகள், மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை போன்ற பலவும் இதில் உள்ளடங்குகின்றன. அரச வழிகாட்டி தத்துவக் கோட்பாடுகளில் அனைத்து மட்டங்களிலும் அனைவரும் சமத்துவ அடிப்படையில் கல்வியை அணுகுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மலையகத்தைப் பொறுத்தவரையில் இக்கூற்று மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகின்றது. மலையகத்தவர்களின் கல்வி நிலைமைகள் ஏனைய துறையினரைக் காட்டிலும் வீழ்ச்சிப் போக்கினையே வெளிப்படுத்தி வருகின்றன. 2012/13 தகவலின்படி பெருந்தோட்ட பகுதிகளில் பாடசாலைக்கு செல்லாதோர் 12.2 வீதமாகவும், 5ம் தரம் வரை கல்வி கற்றோர் 42 வீதமாகவும் 6 - 10ம் தரம் வரை கல்வி கற்றோர் 38.07 வீதமாகவும், க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றோர் 4.09 வீதமாகவும், க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றோர் 2.2 வீதமாகவும் காணப்பட்டனர். பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைக்கு செல்லாதோர் நகரம், கிராமத்தைக் காட்டிலும் 4 - 6 மடங்கு அதிகமாகும். இக்கல்விப் பின்னடைவுகளை சீர்செய்வதில் அரசாங்கத்தின் வகிபாகம் எந்தளவுக்கு கை கொடுத்துள்ளது



என்பது கேள்விக்குறியாகும்.

தொழில் உரிமையானது ஒருவர் விரும்பிய தொழிலை தேர்ந்தெடுத்தலை பிரதான விடயமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் (உறுப்புரை 14) இவ்வுரிமை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தொழிற்பாதுகாப்பு, நியாயமான சம்பளம், பாதுகாப்பானதும் தூய்மையானதுமான தொழில் சுற்றாடல் என்பவற்றுடன் தொழிலுரிமை தொடர்புபடுவதாக புத்திஜீவிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். எனினும் மலையக தொழிலாளர்களின் தொழிலுரிமைகள் பல சந்தர்ப்பங்களில் கம்பனியினராலும், தோட்ட நிர்வாகத்தினாலும் மீறப்பட்டு வருகின்றன. உழைப்பிற்கேற்ற ஊதியமென்பது கானல் நீராகியுள்ள நிலையில் தொழிலாளர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு அவர்கள் கசக்கிப் பிழியப்படுவதும் புதிய விடயமல்ல. இதே வேளை மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்லும் மலையகப் பெண்கள் பலர் தொழில் உரிமைகள் மீறப்பட்ட நிலையில் துன்ப துயரங்களை சந்தித்து வருகின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் அதிகரித்துள்ள நிலையில் பலர் உச்சகட்ட நெருக்கீடுகளால் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளமையும் தெரிந்ததேயாகும். எனவே நாட்டிற்கு தேசிய வருவாயை அதிகளவில் ஈட்டித்தரும் இவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இடம் பெறுதல் வேண்டும்.

### பெயரளவில் தொழில் சட்டங்கள்

இலங்கையில் தொழிற்சட்டங்கள் பல நடைமுறையில் உள்ளன. தோட்டத்தொழிலுக்கு இந்தியாவிலிருந்து அதிகளவான தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டார்கள். இவ்வாறாக இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வருவதற்கும் அவர்களுடைய நலன்களின் பொருட்டும் ஆட்சியாளர்களினால் பல்வேறு கட்டளைச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனடிப்படையில் 1841 இல் 5ம் இலக்கமுடைய ' கூலி மற்றும் சேவைகள் ஒப்பந்த கட்டளைச் சட்டம் 'முதலாவதாக உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு சட்டங்கள் தொழிலாளர்களின் நலன்கருதி உருவாக்கப்பட்ட போதும் இவற்றின்செயற்படுநிலைஅல்லதுநடைமுறைப் பயன்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை. இதனிடையே 2048 ஆகும் போது நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றியமைக்க முடியுமான வகையில் தொழில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தற்போதுள்ள தொழில்சட்டம் காலம் கடந்த சட்டமாகும். இச்சட்டத்தின் ஊடாக தொழிலாளர்கள், முதலீட்டாளர்களுக்கு நலனோம்புகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதுடன் நவீன காலத்துக்கு ஏற்ற வகையில் தொழில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமலுமுள்ளது. மேலும் தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்தல், நாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமான வகையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தல் போன்ற அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் தொழிலாளர் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும். டிஜிட்டல் உலகிற்கு பொருத்தமான தொழிலாளர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். தொழில் சட்டத் திருத்தம் உலகத் தொழிலாளர் அமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேயே மேற்கொள்ளப்படும். அதனால் அதற்காக பொதுமக்களிடம் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

'ஒவ்வொருவரும் உணவு, அடிப்படை வசதி, மருத்துவ கவனிப்பு, அவசியமான சமூக வேலைகள் உட்பட தமதும், தமது குடும்பத்தினரதும் உடல் நலத்துக்கும் நல்வாழ்வுக்கும், போதுமான வாழ்க்கைத் தரத்திற்கும் உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பிற்கும் உரித்துடையவராவர்' என்று ஒரு மனிதனின் வீட்டுரிமை குறித்து சர்வதேச மனிதவுரிமை சாசனம் வலியுறுத்துகின்றது. இலங்கை அரசியலமைப்பின் கீழ் வீட்டுக்கான உரிமை அரச வழிகாட்டி தத்துவக் கோட்பாடுகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசு இலங்கை பிரஜைகளில் வீடற்றோருக்கு நியாயமான வசதிகளுடன் கூடிய வீடுகளை அமைத்துக் கொடுக்கும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளதையும் கூறியாக வேண்டும். எனினும் பெருந்தோட்டப்புற மக்கள் இன்னும் லயத்து வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் தனிவீட்டுக் கலாசாரம் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருகின்றது.' யானைப்பசிக்கு சோளப்பொரி' என்றவாறு நிலைமைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. அரசாங்கம் கிராமப்புற மக்களை மையப்படுத்தி வீடமைப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தியதே தவிர பெருந்தோட்ட தொழிலாளர்களை மையப்படுத்தியதாக நடவடிக்கைகள் அமையவில்லை என்பது கசப்பான உண்மையாகும். வீடமைப்பு தொடர்பில் வெறும் வாக்குறுதிகளால் மலையக மக்களை திருப்திப்படுத்த முனைந்த அரசாங்கம் நடை முறையில் உருப்படியாக எதனையும் செய்ததாக இல்லை.

அடிப்படை தேவைகளுள் ஒன்றாக உறையுள் அல்லது வீடு காணப்பட்டபோதும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# நீதிமன்ற விடுதலைக்குப் பிறகும் சிறையா?

## தமிழ்த்தேச மாணவர் இளைஞர் இயக்கம்,தமிழ்நாடு

1991ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றம்சாட்டப்பட்டு 32 ஆண்டுகளாக சிறைத்தண்டனை அனுபவித்து வந்த அப்பாவி 7 தமிழர்களில் பேரறிவாளனின் விடுதலைக்கு பிறகு கடந்த 2022 நவம்பர் மாதம் 11-ஆம் தேதி முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், நளினி ஆகியோரையும் முழுமையான விடுதலை என்று உச்சநீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தினை நடைமுறைபடுத்தி விடுதலை செய்தது. ஆனால் முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ் ஆகியோரை இலங்கை குடியுரிமையை கொண்டவர்கள் எனக் கூறி அவர்கள் விடுதலை செய்யப்படாமல் திருச்சி சிறைமுகாமில் கடந்த 7 மாதங்களுக்கும் மேலாக மீண்டும் சிறைப்படுத்தி அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது முழுக்கமுழுக்க அரசின் மனிதஉரிமை மீறல் மட்டுமல்லாது சட்டவிரோத செயல்பாடும் ஆகும்.




எழுவர் விடுதலைக்காக தமிழ்நாட்டில் பல்வேறு அமைப்புகள், கட்சிகள், மாணவர்கள், இளைஞர்கள் என்று மக்கள்திரள் போராட்டம் ஒருபக்கமும், சட்டப்போராட்டம் மறுபக்கமும் நடந்துவந்த நிலையில் அன்றைய அதிமுக அரசு எழுவரையும் விடுதலைச் செய்ய 2014-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது. தீர்மானத்தை நிறைவேற்றியவுடன் தனது கடமை முடிந்துவிட்டதாக கருதி எழுவரையும் பிணையில் விடுதலையை மறுப்பது, மருத்துவ சிகிச்சைக்கு முறையான அனுமதி தரமறுப்பது என்று தொடர்ச்சியாக அதிமுக அரசு செய்துவந்தாலும் நீதிமன்றத்தின் உத்தரவின்படியே பிணையில் வெளிவந்தனர். எழுவரின் விடுதலை தொடர்பாக ஆளுநரும் – உச்சநீதிமன்றத்தில் இந்திய அரசும் மாநில அரசுகளின் அதிகாரம் தொடர்பான பல் வேறு விவாதங்களையும் கேள்விகளையும் எழுப்பி எழுவரின் விடுதலையில் திட்டமிட்டு தாமதப்படுத்தி வந்தநிலையில் கடந்தஆண்டு உச்சநீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி பேறறிவாளனுக்கு முழுமையான விடுதலை கொடுத்தது. இந்த தீர்ப்பினை கொண்டு மீதமுள்ள அறுவரையும் விடுவித்தது அதே உச்சநீதிமன்றம். விடுதலை செய்யப்பட்ட ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோர் வெளிநாட்டினவர்கள் என்றுக் கூறி திருச்சி சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டனர். நீதிமன்ற விடுதலைக்கு பிறகும் சிறைக் காவலில் இருந்து முகாம் சிறைக்குள் அடைக்கப்பட்ட அவலம் என்பது தமிழ்நாடு அரசுக்கு இவர்களின் மீதான அக்கறையின்மையா? அல்லது இந்திய அரசின் தூண்டுதலின் பேரில் திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கையா? என்பதை ஆளும் திமுகஅரசு மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும்.

திருச்சி சிறப்பு சிறைமுகாம் என்பது சட்ட விரோத ஊடுருவாளர்கள், வெளிநாட்டு குடியுரிமை பெற்று இந்தியாவில் போதைப்பொருள் விற்பனை, சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டவர்கள், போலி கடவுச்சீட்டு மூலமாக வந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கான தனித்த சிறையாகும். நீதிமன்றமே முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ் ஆகியோருக்கான விடுதலையை அறிவித்துவிட்ட பிறகு நால்வரையும் சிறப்பு சிறைமுகாமில் சிறைப்படுத்தி இருப்பது "32 ஆண்டுகளாக மறுக்கப்பட்ட, 32 ஆண்டுகளுக்கு பிறகு பெறப்பட்ட" நீதியினை மறுப்பதாக உள்ளது. இதுநாள் வரை இலங்கை அரசும் சிறைப்பட்ட போதும், விடுதலைக்கு பிறகும் நால்வரையும் தங்கள் நாட்டு குடிஉரிமை உள்ளவர்கள் என்று கோரிக்கைக் கூட வைத்தது கிடையாது. இலங்கையில் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான பாரிய இனப்படுகொலைக்கு பிறகும் தமிழர்கள் சமத்துவத்துடன் வாழும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்பில்லாத நிலையில், நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்கும் முடிவும் பரிசீலனையில் இருப்பதாக கூறியிருப்பது நால்வர் உயிரை கேள்விக்குள்ளாக்கும் செயலாக தான் அமையும்.

சிறப்பு முகாமில் அடைக்கும்போது திருச்சி மாவட்ட ஆட்சியர் நால்வர் விடுவிப்பு தொடர்பாக அவர்கள் எந்த நாட்டிற்கு செல்ல விரும்புகின்றனரோ அந்த நாட்டிடம் தூதகர அடிப்படையில் பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார். ஆனால் அரசு நிர்வாகம் விடுதலை தொடர்பாக எவ்வித நகர்வினையும் எடுத்ததாக தெரியவில்லை. மாறாக அந்த நால்வருக்கும் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு அதனை கேட்டு போராடக் கூடிய சூழல்தான் நிலவுகிறது. சமீபத்தில் ராபர்ட் பயாஸ் அவர்கள், நடைபயிற்சி செய்வதற்கு கூட அனுமதியில்லை என்று கூறி 8 நாட்களுக்கும் மேலாக பட்டினிப் போராட்டம் நடத்தினார். பகலில் கூட சிறைக்கம்பிகளை திறந்துவிடாமல் அடைத்துவைத்தும், உடல்நலனை பேணுவதற்கு நடைபயிற்சி செய்வதற்குக்கூட தடைவிதித்தும், சிறையில் காவலர்களை குவித்து வைத்து தனிமை சிறையில் அடைத்து வைத்திருப்பது என்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இதனால் 32 ஆண்டுகால சிறை கொட்டடி கொடுத்த மன உளைச்சலையும், உடலியல் நோய்களையும் சிறப்பு முகாம் சிறைக்கொடுமை தீவிரப்படுத்தி வருகிறது.




பேரறிவாளன், ரவிச்சந்திரன், நளினி ஆகியோர் விடுதலைக்கு பின்பு பொதுமக்களுடன் இயல்பாக வாழ்ந்துவரும் நிலையில் நால்வரையும் குற்றவாளிகளுடன் சிறைப்படுத்தாமல் நால்வரையும் அவர்களின் உறவினர்களுடன் தற்காலிகமாக தங்கவைப்பது, ஈழத்தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் வாழும் அவர்களின் உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக தங்கவைப்பது போன்ற நடவடிக்கைகளை எடுத்து நால்வரும் எந்த நாட்டில் நிரந்தரமாக குடியிருக்க விருப்பம் தெரிவிக்கின்றனரோ அந்த நாட்டிற்கு செல்ல கடவுச்சீட்டு, நுழைவுச்சீட்டு முதலியவற்றை மத்திய மாநில அரசுகள் தூதரக அளவில் விரைந்து நடைமுறைகளை செய்ய வேண்டும் அல்லது இந்தியாவிலே இருக்க விரும்பினால் ஈழத்தமிழர்களுக்கு அரசு கொடுத்துள்ள சட்டநிலை தகுதி மற்றும் உரிமைகளை தருவதற்கான நடைமுறைகளை செய்து நால்வருக்கான மறுக்கப்படும் நீதியை தரவேண்டும்.

"எழுவர் விடுதலை என்பது தமிழ்நாட்டின் மறுக்கப்பட்ட அரசியல் உரிமைக்கான முழக்கமாகும்." எழுவரின் விடுதலையில் தமிழ்நாட்டு மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் பங்கு அளப்பரியதாகும். தோழர் செங்கொடி என்ற இளம்பெண்ணின்தழல்ஈகம்தான்முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குக் கயிற்றை எரித்து சாம்பலாக்கியது. எழுவர் விடுதலைக்காக தமிழ்நாட்டு மாணவர்கள், இளைஞர்களின் எழுச்சி தான் அரசியல் கட்சிகளையும், மக்களையும் போராட்டக்களத்தில் இணைய வைத்தது. இத்தகைய போராட்டத்திற்கு பிறகு எழுவரும் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டாலும் முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ் ஆகியோருக்கு விடுதலைக்கு பின்னும் தொடரும் சிறைக்கொடுமையானது இந்திய நாட்டில் சனநாயகம் மற்றும் மனித உரிமைகள் குறித்தான கேள்விகள் எழுகிறது. 2014லில் இந்தியாவின் பிரதமராக வந்த நரேந்திர மோடி ஈழத்தமிழர்கள் நலனில் அக்கறை உள்ளவர் போலவும், இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு – கிழக்கு பகுதியில் இந்திய தலைவர்கள் அதிக கவனம் செலுத்துவது போன்ற அரசியல் நகர்வுகள் மறுவாழ்வு முகாமில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு இரட்டைகுடியுரிமை தருவதிலும், இலங்கைக்கு எதிரான 2009 இனஅழிப்பு தொடர்பான பன்னாட்டு தீர்மானங்களிலும் தமிழ்நாட்டின் அரசியல் நிலைப்பாட்டிற்கு மாறாக ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் அலட்சியம் காட்டுவது என்பது இந்தியா தனது வெளியுறவு கொள்கையில் துளியளவும் மாற்றம் கொள்ளாமல் இருப்பதை காட்டுகின்றது. இந்தநிலையே நால்வர் விடுதலையிலும் தொடருவதை தமிழர்கள் புரிந்துகொண்டு மறுக்கப்படும் தமிழ்நாட்டு உரிமைக்கு குரல் கொடுப்பதும், களம் காண்பதும் கோரிக்கையினை வென்றெடுப்பதும் தமிழ்த்தேசிய இனத்தின் மக்களான நமது கடமையாகும்.

• • •

### தனிநாட்டு பிரகடன ... தொடர்ச்சி...

என்ன நிகழப்போகின்றது என அவர்களுக்கு முன்னரே தெரிந்திருந்தால் நாம் தனிநாட்டுக்கான வாக்கெடுப்பில் வெற்றி பெற்றிருப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் அவரின் ஸ்கொட்லாந்து தேசிய கட்சியின் முன்னாள் முதல்வர் ஸ்ரேஹனும், அவரது கணவர் பிற்றர் முரேலும் நிதி மோசடி தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர். தற்போது அவர்கள் விடுவிக்கப்பட்டாலும் விசாரணைகள் தொடர்கின்றன. ஸ்ரேஹனே 2014 ஆம் ஆண்டு தனிநாட்டுக்கான வாக்கெடுப்பை நடத்தியிருந்தார். தற்போது அவரின் கைது கட்சிக்கான ஆதரவை குறைக்கலாம் என கருதப்படுகின்றது.



# மணிப்பூர்:

# பேரினவாதம் நிகழ்த்தி வரும் இனவழிப்பு!

**தியாகு,** பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்(தமிழ் நாடு)

இந்தியத் துணைக்கண்டத்தின் வடகிழக்கு தேசங்களில் ஒன்றாகிய மணிப்பூர் மாநிலத்தில் மெய்த்தி சமுதாயத்துக்கும் குக்கி, நாகா, ஸோ ஆகிய பழங்குடிச் சமுதாயங்களுக்கும் இடையில் தொடர்ந்து வரும் இன வன்முறைக்கு உடனடிக் காரணங்கள் பலவும் சொல்லப்பட்டாலும், அடிப்படைக்காரணம்... குக்கி முதலான பழங்குடிகளுக்கு எதிரான மெய்த்தி சமுதாயத்தின் பேரினவாத ஒடுக்குமுறைதான். சிங்களப் பேரினவாதம் போன்றதே மெய்த்திப் பேரினவாதம்.

இந்தப் பேரினவாதத்துக்கு ஆர்எஸ்எஸ்-பாசகதமது இந்துத்துவ அரசியல் நோக்கங்களுக்காக ஊக்கமளித்து வருகின்றன. மணிப்பூரை ஆளும் பாசக மாநில அரசு – முதலமைச்சர் பிரென் சிங்-வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கு மாறாக, குக்கிகள் மீது வெறுப்புமிழும் பேச்சுகளைக் கொண்டு வன்முறையைத் தூண்டி வருகிறது. மணிப்பூர் வன்முறையை அனைத்திந்திய அளவில் இந்துத்துவப் பிரித்தாளும் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்வது எப்படி என்பதுதான் உள்துறை அமைச்சர் அமித்சாவின் ஒரே கவலை.

இந்தியாவுக்கு ஒரு தலைமையமைச்சர் இருக்கிறார். அவரைப் பிரதமர் நரேந்திர மோதி என்றும் சொல்வார்கள். 'உலகம் சுற்றும் வாலிபர்' என்று பெயர் பெற்றுள்ள திருவாளர் மோதி எப்போதாவது இந்தியா வருகிறார். அப்போதும் அவருக்கு மணிப்பூர் பற்றிப் பேச நேரம் இருப்பதில்லை. அவரைக் காரியக்கார ஊமை என்றுதான் சொல்ல வேண்டும்.

மெய்த்தி சமுதாயத்துக்கு அட்டவணைப் பழங்குடித் தகுநிலை வழங்கும்படி நடுவணரசுக்குப் பரிந்துரை செய்யும் படி மாநில அரசுக்குப் 2023 ஏப்ரல் மாதம் மணிப்பூர் உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணைதான் இந்த வன்முறைக்கு உடனடித் தூண்டுதலாக அமைந்தது. அட்ட வணைப் பழங்குடித் தகுநிலை கிடைத்தால் மெய்த்தி சமுதாயம் பெறக்கூடிய நன்மை... இப்போது பழங்குடிச் சமுதாயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்துக்கு உரிமை கோர முடியும்.

மே திங்கள் முழுக்க தொடர்ச்சியான வன்முறைத் தாக்குதல்கள் நடந்து, இரு தரப்பும் ஆயுதந்தரித்திருந்த நிலையில் உள்நாட்டுப் போரையொத்த நிலைமை தோன்றியது, சட்டம் ஒழுங்கு அடியோடு குலைந்தது. ருவாண்டா இனவழிப்புப் போன்ற நிலைமைதான் காணப்பட்டது

பாசகவும் நடுவண் அரசும் மாநில அரசும் மக்களைப் பிரிக்கும் அரசியல் ஆட்டம் ஆடி வருவது நரவேட்டையை மோசமாகியுள்ளது. ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக அனைவரும் வன்முறையால் துயருற்றுள்ளனர், 300க்கு மேற்பட்ட ஏதிலி முகாம்களில் 50,000க்கு மேற்பட்ட மக்கள் தங்கியிருக்க, இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பழங்குடி மக்கள்.

உண்மையில் பாசக மாநில அரசு வனப் பகுதிகளிலிருந்து 'சட்டப்புறம்பான' குடியேறிகளை' அகற்றும் முயற்சிகளை இந்த ஆண்டு சனவரியில் தொடங்கிய போதுதான் நிலைமை மோசமாயிற்று. பழங்குடியினரான வனவாழ்வோரை 'வன்பறிப்பாளர்கள்' என்று அறிவித்து சுராசந்த்பூர், காங்போக்பி, தெங்னூபால் மாவட்டங்களில் மாநில அரசு நிலவெளியேற்ற நடவடிக்கை தொடங்கிற்று.



நாடெங்கும் பாசக கையாளக் கூடிய அதே வழிமுறைதான், காலங்காலமாய் இருந்து வரும் இனக்குழுப் பதற்றங்களை அது தன் சொந்த அரசியல் ஆதாயத்துக்காக முறச் செய்து வருகிறது. பாசக இரு சமுதாயங்களுக்கும் கூட்டாளி போல் நடித்துக் கொண்டே அவற்றுக்கிடையிலான வரலாற்றுவழிப் பதற்றங்களின் இடைவெளியை அகலப்படுத்தி வருகிறதே தவிர, தீர்வு நோக்கிய உரையாடலை எளிதாக்க எம்முயற்சியும் செய்யவில்லை.

இப்போதைய நிலவரத்தில், அரம்பை தெங்கோல், மெய்த்தி லீபுன் ஆகிய மெய்த்தி பேரினவாத ஆயுதக் குழுக்களே குக்கி இன மக்களுக்கு எதிராகப் படுமோசமான வன்முறைக் கொடுமைகள் செய்துள்ளன. இனவழிப்புக்குரிய வெறுப்புமிழும் பேச்சுகளும், என்ன செய்தாலும் தட்டிக் கேட்கவும் தண்டிக்கவும் யாருமில்லை என்று பேரினத் திமிர்த்தன வெளிப்பாடுகளும் இத்துடன் சேர்ந்து கொண்டன. இவற்றுள் முதற்குழு ஒரு பழமைமீட்புக் குழுவாகும். இரண்டாம் குழு தெள்ளத் தெளிவாகவே இந்துப் பேரினவாதச் சார்புடையதாகும். முதலமைச்சர் பிரேன் சிங் இந்தக் குழுக்களுடன் நெருங்கிய ஈடுபாடு உடையவர். இரு குழுக்களுமே குக்கி சமுதாயத்தை "சட்டப்புறம்பான வெளியார்" என்றும் "போதைப் பொருள் திகிலியர்கள்" (நார்கோ பயங்கரவாதிகள்) என்றும் இழிவாகப் பேசுகின்றன. மெய்த்தி லீபுன் தலைவர் ஊடகச் செவ்வி ஒன்றில், மைத்திகள் பூசலுக்குரியவையாகக் கருதும் பகுதிகளில் குக்கிகள் "துடைத்தெறியப்படுவார்கள்" என்று வெளிப்படையாகவே அறிவிக்கத் தயங்கவில்லை. குக்கி சமுதாய மக்கள் "சட்டப்புறம்பானவர்கள்", "வெளியார்கள்", "குடும்பத்தில் இடம்பெறாதவர்கள்" "மணிப்பூருக்குச் சொந்தமல்லாதவர்கள்", மணிப்பூரில் "குடக்கூலிகள்" என்றெல்லாம் அவர் வர்ணித்தார்.

சிறுபான்மைச் சமுதாயம் ஒன்றைச் "சட்டப்புறம்பானவர்கள்" என்று மாந்த நீக்கம் செய்கிற இந்த மொழியைத்தான் ஒன்றிய உள்துறை அமைச்சரும் அசாம் முதலமைச்சரும் அசாமில் தேசியக் குடிமக்கள் பதிவேடு செய்யும் முயற்சியின் போது பேசினார்கள். இப்போது அதே மொழி வடகிழக்கில் மற்றுமொரு மாநிலத்துக்குப் பரவியுள்ளது. வெறுப்பும் வன்முறையும் அயலார் மீது வன்மவெறியுமான தீயை மூட்டி வருகிறது.

இப்போது தொடரும் வன்முறையில் கொல்லப்பட்டவர்களில் மிகப் பெரும்பாலார் குக்கி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று செய்திகள் காட்டுகின்றன. பள்ளிகள், தானியக் களஞ்சியங்கள், வீடுகள் இவற்றோடு, குக்கிகளின் 200க்கு மேற்பட்ட கிறித்துவ தேவாலயங்கள் கொளுத்தப்பட்டுள்ளன.

இன்று பொய்ச் செய்தி எனப்படும் வதந்திகள் பரப்பி, சமுதாயங்களுக்கிடையே மோதல்களைத் தூண்டி விடுவது - காலங்காலமாய்க் கையாளப்படும் இந்த உத்தி-பெண்களை எளிதில் இலக்காக்கும் நடைமுறை தொடர்கிறது. மெய்த்திப் பெண்களை குக்கிகள் வன்புணர்வு செய்து விட்டார்கள் என்று பேரின மெய்த்திக் குழுக்கள் பரப்பிய பொய்ச் செய்தியைச் சாக்கிட்டு குக்கி இனத்தவரை அடித்துக் கொல்வதும் குக்கி-ஜோ பெண்களை வன்புணர்வு செய்வதுமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வெறிக் கும்பல்கள் "அவளைக் கெடு, அவளை வதை செய்" என்று கத்திக் கொண்டே பெண்களைத் தாக்கியதாகச் செய்திகள் வந்துள்ளன.

தற்சார்பானவர்களும் கட்சிசார்பற்றவர்களுமான குடியியல் சமூக உறுப்பினர்கள்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# Club De Paris இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதற்கு முன், ரணிலின் வரலாற்றுத்தவறுகளை கவனிக்க வேண்டுகோள்

—அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

2023 ஜூன் 22 - 23 திகதிகளில் புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தத்திற்கான உலகத் தலைவர்கள் உச்சிமாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பேசுவதற்காக அழைத்திருந் தார்கள்.

இனப்படுகொலையாளரான ரணில் விக்கிரமசிங்கவின் வரலாற்றுத் தவறுகளை நாம் பட்டியலிட்டுக் காட்ட விரும்புகின்றோம். இலங்கையை விட்டு வெளியேறி, தற்போது பிரான்சு நாட்டின் பாதுகாப்பின் கீழ் வாழும் 100,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் மற்றும் ஐரோப்பாவில் வாழும் கிட்டத்தட்ட 500,000 தமிழர்கள் மற்றும் உலகின் பிற பகுதிகளில் வாழும் சுமார் ஒரு மில்லியன் ஈழத்தமிழர்கள் சார்பாக, பின்வரும் உண்மைகளை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம் என்ற உள்ளடக்கத்துடன் அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை கடிதம் ஒன்றை பாரிஸ் கிளப்பிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

பாரிஸ் கிளப் (Club De Paris) இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதற்கு முன்னர் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்.

நிதி பிணையெடுப்பை வழங்குவதற்கு முன்னர் இலங்கை மீது நிபந்தனைகளை விதிக்கு மாறு பிரான்ஸ் ஜனாதிபதி என்ற வகையில் தாழ்மையுடன் எங்கள் கோரிக்கைகளை முன்வைக் கின்றோம்.

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள பாரதூரமான நிதி நெருக்கடிக்கு பல காரணங்கள் உள்ளன. வரவுசெலவுத் திட்டத்தில் 40 வீதத்தை சொந்த நாட்டு மக்களாகிய தமிழ்மக்கள் மீது நடைபெற்ற யுத்தம் ஒரு முக்கிய காரணியாகும். தமிழ் மக்களுக்கு எதிராக அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் பின்பற்றிய இனப்படுகொலை தமிழ்மக்களுக்கு எதிரான அரச கொள்கைகள் தமிழ் மக்களை அவர்களின் உரிமைகளுக்காகப் போராடத் தூண்டியது, இது 100000 ற்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்களின் படுபாதகப் படுகொலையுடன் முடிவுற்றது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடி வடைந்த போதிலும், நாட்டின் பாதுகாப்புக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவும் இல்லாத போதிலும், இலங்கையின் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளன. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தாயகப் பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்களை பாரியளவிலான இராணுவ மயமாகல் ஊடாக ஓரங்கட்டுவதற்கும் இத்தகைய செலவுகள் செய்யப்பட்டன என்பது தெளிவாகிறது. இலண்டனில் உள்ள சர்வதேச மூலோபாய கற்கைகள் நிறுவனத்தின் (IIST) ஆய்வுகளின் படி உலகின் 30 பெரிய இராணுவங்களில், மக்களை ஆயுத அடக்குமுறையின் வைத்திருக்கும் இராணுவமாக இலங்கை உலகளாவிய ரீதியில் 20 வது பெரிய இராணுவமாக நிற்கிறது என்று கணக்கிட்டுள்ளது. போருக்குப் பிந்தைய காலத்தை உள்ளடக்கிய பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டம் (17.28 பில்லியன் அமெரிக்க டாலர்) உள்நாட்டுப் போர் காலத்தை விட 14.92 பில்லியன் அமெரிக்க டாலர் அதிகமாகும்.

2018 ஆம் ஆண்டில், பாதுகாப்புப் படையினரின் மொத்த எண்ணிக்கை 317,000 க்கும் அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலான முக்கிய இராணுவ அதிகாரிகள் இன அழிப்புப் போரின் போது இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் மிக நெருக்கமான கூட்டாளிகள் ஆவர். மற்றும் அவர்களுக்கு நாட்டிற்கு வெளியே முக்கிய இராஜதந்திர பதவிகள் வழங்கப்படிருந்தன அல்லது தற்போதைய அரசாங்க நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்களில் பலர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை அறிக்கையில் மனித குலத்திற்கு எதிரான பல படுபாதகக் குற்றச் செயல் கள் புரிந்தவர்கள என அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்த தில் இருந்து இராணுவத்தின் எண்ணிக்கை 200,000 இலிருந்து 300,000 க்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது, மற்றும் அவர்கள் உள்ளூர் தமிழ் தொழிலாளர்களுடன் போட்டியிடும் வகையில் வணிக முயற்சிகளை மேற்கொள்வது, கட்டுமான ஒப்பந்தங்களில் ஈடுபடுவது, சிவில் நிர்வாகம் மற்றும் விவசாயம் போன்ற மக்களின் தொழில்களையும் அவர்கள் வருமானத்தையும் முடக்குகின்றனர்.

இலங்கையில் ஊழல் மலிந்து கிடக்கிறது என்பது ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல, கடந்த பதினைந்து ஆண்டுகளில் பாதுகாப்புக்காக செலவிடப்பட்ட கொள்வனவில் முழுமையான நிதித் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மிக அவசியமாகும். The Transparency International 2015ம் ஆண்டு ஊழல் எதிர்ப்பு அறிக்கையின் படி இலங்கையில் 'பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் துறைகளில் அதிக அளவிலான ஊழல் நடைபெற்ற தாகத் தெளிவாகக் கூறுகிறது.

எனவே, பாதுகாப்பு போர்த் தளபாடங் கள் கொள்வனவில் மட்டுமின்றி, உர ஒப் பந்தங்கள், 2004 சுனாமி நன்கொடைப் பயன்பாடு, எண்ணெய் கசிவுக்கு இழப்பீடு வழங்குவது உள்ளிட்டவற்றுக்கும், நிதி தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கை அரசியல்வாதிகள் எவ்வாறு இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் ஆடம்பரச் சொத்துக்களையும் சொந்தமாக்கிக் கொண்டுள் ளனர், அரசாங்க சம்பளத்துடன் ஆடம்பரப் பொருட்களை எவ்வாறு சொந்தமாக்கிக் கொண்டனர் என்பது குறித்தும் கேள்வி எழுப்ப வேண்டியது அவசியமாகும்.

முறையான நிதித் தணிக்கை மேற்கொள் ளப்படாவிட்டால், ஊழல் அரசியல்வாதிகளின் கஜானாக்கள் உலக வங்கி வழங்கும் நிதியால் நிரப்பப்படும் அபாயம் மிக அதிகம். சர்வதேச சமூகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அடிப் படை மனித உரிமைக் கடப்பாடுகளை நிறை வேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் இன்றுவரை இணங்க மறுக்கிறது. பின்வரும் விடயங்கள் குறித்து இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது அவசியமானதாகும்.

1. இலங்கைக்கு அதிகளவிலான ஏற்று மதியை ஈட்டித்தருவது ஆடை உற்பத்தயாகும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஐக்கிய இராச் சியம் மற்றும் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆடைகளை உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகளை நிறுவியதன் மூலம் ஒரு சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆடை ஏற்றுமதியில் சீனா மற்றும் பங்களா தேசுடன் இலங்கை கடுமையான போட்டியை எதிர்கொள்கிறது. இந்த இரண்டு நாடுகளும் குறைந்த விலை உற்பத்தியாளர்கள். ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக் காவின் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைகளை இலங்கை நம்பியுள்ளது. நாட்டின் மனித உரிமைகள் உள்ளிட்ட 27 காரணிகளின் அடிப்படையில் ஜி.எஸ். பி பிளஸ் சலுகை இலங்கைக்கு வழங்கப்படுகிறது. இலங்கையின் மோசமனா மனித உரிமைமீறல் செயற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாமல் ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்கியதற்காக விமர்சனத்திற்கு உள்ளானது.

2. ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் போது 70,000 க்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பு (இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கை குறித்த செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் அறிக்கை). ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தின் பிரகாரம் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனிதகுலத்திற்கு எதிரான படுபாதகக் குற்றச்செயல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணையை மேற் கொள்வதற்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையு டன் இலங்கை இன்றுவரை ஒத்துழைக்க மறுத்து வருகிறது..

எனவே, இலங்கையை அதன் நிதி நெருக் கடியில் இருந்து காப்பாற்ற முடிவு செய்யும் போது தீர்மானங்கள் அல்லது நிபந்தனைகளை எடுக்கும்போது பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

**இலங்கையின் பாதுகாப்பு அதன் அனுகூலமான மட்டத்திலிருந்து வேறுபடுவதற்கு ஆறு முதன்மையான காரணிகள் உள்ளன.**

1. 2009 இல் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் புதிய மூலோபாய சூழல் மற்றும் சவால்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் விளக்கப்படாவிட்டால், அதன் பாதுகாப்பு செலவில் எந்தவிதமான மாற்றத்தையும் காணமுடி யாது.

2. இலங்கை அரசாங்கம் அதன் செயற் பாட்டின் மூலம், தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் களை அவ்வப்போது மீளாய்வு செய்து, தேசிய பாதுகாப்பு நோக்கங்களை அல்லது அதன் பாது காப்பு செலவினங்களுக்கு ஏற்ப அவற்றை அடைவதற்கான மூலோபாயங்களை கோடிட்டுக் காட்டுகிறதா என்பது சந்தேகத்திற்குரியது.

3. பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை கேள்விக் குட்படுத்துவதற்கான நுண்மையான அறிவு திறைசேரிக்கும் தற்போதைய பாராளுமன்றத்திற் கும் இல்லை, எனவே திறைசேரி மற்றும் பாராளுமன்றம் வழங்கிய மேலோட்டமான முன்மாதிரி மறுஆய்வுக்கு வெளியே பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டத்தை சுயாதீனமாக ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

4. பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டம் எஞ்சியதாக இருக்கக்கூடாது (மற்ற அனைத்தும் ஒதுக்கப்பட்டவுடன் எஞ்சியிருக்கும்) அல்லது முந்தைய ஆண்டு ஒதுக்கப்பட்ட செலவினங்களை விட ஒரு குறிப்பிட்ட சதவீதம் மற்றும் தேசிய பாதுகாப்பு மூலோபாயங்களின் காரணிகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சிறீலங்கா முன்னெடுத்த போரில் இஸ்ரேல் வகித்த பங்கு

தமிழில்: **ஜெயந்திரன்**

சிறீலங்காவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 29 ஆண்டு காலப் போரின் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாட்டின் ஒரு சில பகுதிகளில் அமைதி ஏற்பட்டிருக்கின்றது போன்ற தோற்றம் இருக்கின்ற போதிலும், இந்தப் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி இன்னுமே வழங்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகளும், பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், கடந்த பல வருடங்களாக இந்த நாட்டிலே இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை மிகவும் நேர்த்தியாக ஆவணப்படுத்தியிருக்கின்றன. அரச படைகளாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் இழைக்கப்பட்ட குற்றங்களை ஆவணப்படுத்துவதே இந்த அமைப்புகளின் முக்கிய நோக்கமாக இருந்திருக்கிறது. அதே நேரம் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களை நோக்கும் போது, சிறீலங்காவுக்கு அந்தப் போரிலே ஆதரவளித்த பன்னாட்டு ஆதரவாளர்களின் பங்கு இந்தப் போர்க்குற்றங்களைப் பொறுத்தவரையில் எப்படிப்பட்டது என்பதை இதுவரை யாரும் ஆய்வுசெய்யவில்லை.

சிறீலங்காவின் இறுதிப்போரிலே அவர்களுக்கு ஆதரவு வழங்கிய நாடுகளில் இஸ்ரேலும் ஒன்றாகும். 2000ம் ஆண்டில், இஸ்ரேலின் இராணுவ தொழில்நுட்பங்களைப் பெற்று, இஸ்ரேலின் உதவியைப் பெறும் நாடுகளில் முக்கியமான ஒரு நாடாக சிறீலங்கா விளங்கியது. அதுமட்டுமன்றி போரிலே ஈடுபட்ட துருப்புகளுக்கும் இஸ்ரேல் பயிற்சிகளை வழங்கியிருந்தது.



நானும், இஸ்ரேல் மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்கான போராளிகள், 'எல்லாவற்றுக்கும் எல்லை உண்டு', தோறாற் ஸெடெக் போன்ற அமைப்புகளைச் சேர்ந்த ஆர்வலர்களும் சேகரித்த ஆதாரங்களைப் பார்க்கும் போது, சிறீலங்காவில் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களில், இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது நிரூபணமாயிருக்கிறது.

சிறீலங்காவில் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களில், இஸ்ரேலின் பங்கு வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்றும், அத்துடன் அவற்றுக்கான விசாரணைகள் முன்னெடுக்கப் படவேண்டும் என்றும் நாங்கள் விரும்புகிறோம்.

**சிறீலங்கா வானத்தில் இஸ்ரேலிய ஆளில்லா விமானங்கள்**

வியட்நாம் போரிலே வேவு பார்ப்பதற்காக அமெரிக்கா அதிகமாகப் பயன்படுத்திய ஆரம்ப கால ஆளில்லா விமானங்கள் (*UAV - Unmanned Areal Vehicle*) பலவற்றை 1970களின் நடுப்பகுதியில் இஸ்ரேல் வாங்கி, அவற்றின் தொழில் நுட்பத்தை மேலும் அதிகமாக விருத்திசெய்யத் தொடங்கின. 1980களில், லெபனானுடன் தான் மேற்கொண்ட போரிலே, இந்த ஆளில்லா விமானங்களை அதிகமாகப்பயன்படுத்தி, குறிப்பிடத்தக்க அளவு வெற்றிகளை இஸ்ரேல் பெற்றிருந்தது. அதன் பின்னர் இந்த ஆளில்லா விமானங்கள் வலிந்த தாக்குதலை மேற்கொள்ளக்கூடிய விமானங்களாக மாற்றியமைக்கப்பட்டு, காஸாப் பிரதேசத்திலே தான் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு இஸ்ரேல் இந்த விமானங்களைப் பயன்படுத்தியது.



மத்திய கிழக்கில், பொதுமக்கள் மீதும், இராணுவ இலக்குகள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுச் சோதனைக்குள்ளாக் கப்பட்ட இந்த விமானங்களுக்கு உலகம் முழுவதுமே மிக அதிகமான கேள்வி உண்டு.

1990 களுக்கும் 2000ம் ஆண்டுகளுக்கும் இடையே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முனைப்புப் பெற்ற போது, இஸ்ரேலிடமிருந்து சிறீலங்கா வாங்கிய இராணுவ உபகரணங்களுள் இந்த ஆளில்லா விமானங்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.

"இஸ்ரேலிய தயாரிப்பான ஆளில்லா விமானங்கள் போரிலே மிகவும் முக்கியமான பங்கை வகித்திருக்கின்றன" என்று சிறீலங்கா இராணுவம் நேரடியதாகத் தெரிவித்திருந்தது. "அப்பாவிப் பொதுமக்களுக்கு எந்தவகையான பாதிப்பும் இருக்கக்கூடாது என்ற தங்களது கொள்கையின் அடிப்படையில், தமது தாக்குதல்களை தாங்கள் மேற்கொள்வதற்கு முன்னர், ஆளில்லா விமானங்களால் படமாக்கப்பட்ட காணொளிகளை பார்ப்பதை தாம் வழக்கமாகக் கொண்டிருந்ததாக, சிறீலங்கா அரசினதும் அதன் பாதுகாப்புப் படைகளினதும் உயரதிகாரிகள் பலர் தாங்கள் வழங்கிய செவ்விகளில் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றனர்.



இது இவ்வாறிருக்க, "அப்பாவிப் பொதுமக்கள் தொடர்பாக மிக மிக மோசமான குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன" என்று ஐக்கிய நாடுகள் தனது ஆய்வுகள் மூலம் கண்டறிந்திருக்கின்றது. ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின் படி, போரின் கடைசி மாதங்களில், 40,000 க்கும் 75,000 க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் சிறீலங்கா அரச படைகளினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டதாகவும் அறிவிக் கப்பட்டிருக்கிறது.

"ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தும் போது, அப்பாவி மக்கள் கொல்லப்படுவதும் அவர்களது சொத்துக்கள் அழிக்கப்படுவதும், ஏற்கனவே அறியப்பட்டிருந் தது மட்டுமன்றி, அரச மற்றும் இராணுவ அதிகாரிகள் இது பற்றி நன்கு அறிந்திருந்தார்கள் என்றும் அதற்கான அனுமதியை வழங்கியிருந்தார்கள் என்றும் அறியப்படுகிறது. இது பன்னாட்டு மனிதாயத்துக்கு எதிரான குற்றம் என்பது குறிப்பிடப்படவேண்டும். வேறு வகையாகச் சொல்வதாயின், இஸ்ரேலின் ஆளில்லா விமானங்கள் அப்பாவிப் பொதுமக்களின் சாவுகளைத் தவிர்க்கவில்லை. அதற்கு மாறாக அப்பாவிப் பொதுமக்களின் சாவுகளுக்கு உதவியிருக்கிறது என்பதே உண்மையாகும்.

சிறீலங்காவில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களாக இருந்தாலும் சரி, மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களாக இருந்தாலும் சரி, இஸ்ரேலின் இந்த ஆளில்லா விமானங்கள் மட்டுமல்லாமல் வேறு பல ஆயுதங்களும் இந்தப் போர்க்குற்றங்களை இழைக்கப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.



இஸ்ரேல் தயாரிப்பான கிபீர் (*Kfir*) தாக்குதல் விமானங்கள், டோறா (*Dvora*), ஷல்டாக் போர்க்கப்பல்கள்(*Shaldag battleships*), ஆட்டிலறி எறிகணைத் தொகுதிகள், கடலிலிருந்து கடலுக்குப் பாயும் கபிரியேல் ஏவுகணைகள் (*Gabriel sea-to-sea missiles*) போன்ற பல்வேறு ஆயுதங்களை சிறீலங்கா இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்திருந்தது.

அப்பாவிப் பொதுமக்களையும், மனித நேயப் பணிகளுக்கான பயன்படுத்தப்பட்ட மையங்களையும் வேண்டுமென்றே தெரிவு செய்து தாக்கிய இவ்வகையான கனரக ஆயுதங்களுக்கான வழிகாட்டுதலை, வேவு பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் இஸ்ரேல் தயாரிப்பான இந்த ஆளில்லா விமானங்கள் வழங்க, பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்களைக் காவுகொடுத்து சிறீலங்கா போருக்கான வெற்றியை ஈட்டியிருந்தது.

கிபீர் விமானங்களின் உதவியுடன் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களில் அனைவராலும் அறியப்பட்ட தாக்குதல், 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

ஜுன் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் சேர்ஜி சொய்குவும், முப்படைகளின் பிரதானி வெலரி ஜெரசிமோவும் தனக்கு எதிராக செயற் படுவதாகவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ரஸ்யாவின் தனியார் பாதுகாப்பு படைப்பிரிவான வக்னர் குழுவின் தலைவரான எஜெனி பிறிகோசின் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் அன்று மாலை வக்னர் குழுவின் பின்னிருக்கை தளம் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனை ரஸ்யாவே மேற்கொண்டதாக தெரிவித்த வக்னர் குழு ரஸ்யாவின் தெற்குபுற நகரான றொஸ்ரோவை நோக்கி நகரத்தொடங்கினர்.



# வக்னர் குழுவின் ஆயுத நடவடிக்கை
# விடை தெரியாத வினாக்கள்

வேல்ஸ் இல் இருந்து: **அருஸ்**



தென்பிராந்திய கட்டளைத் தலைமைய கத்தை அவர்கள் கைப்பற்றியதால் செய்தி உலகம் எங்கும் பரவியதுடன், ரஸ்யாவின் தலைநகர் மொஸ்கோ உட்பட பல நகரங்களும் எச்சரிக்கை நிலைக்கு கொண்டுவரப்பட்டன. நள்ளிரவே ரஸ்ய அதிபர் பூட்டினுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டதுடன், பாதுகாப்பு அமைச்சகம், எப்.எஸ்.பி எனப்படும் புலனாய்வு அமைப்பு மற்றும் தேசிய காவல்படை என்பன உசார்படுத்தப் பட்டன.

ரஸ்யாவின் நெருக்கடி நிலை தொடர்பில் பூட்டீன் நாட்டுமக்களுக்கு உரையாற்றுவார் என தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க அதிபருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நிலமையை அவதானிப்பதாக வெள்ளைமாளிகை தெரிவித்தது.

மொஸ்கோவுக்கான பிரதான சாலையான எம்-4 மூடப்பட்டது. வீதியை மறித்து மண் அணைகள் அமைக்கப்பட்டன. மக்களை அமைதி யாக இருக்குமாறு றொஸ்ரோ நகரபிதா கேட்டுக் கொண்டார். இரு தரப்பினருக்கும் மோதல் கள் ஆரம்பித்துள்ளதாக சமூக வலைத்தளங்கள் செய்திகளை பரப்பின. மொஸ்கோவை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன், எல்லா நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்பட்டன. மொஸ் கோவில் பயங்கரவாத தடுப்பு சட்டம் பிரகடனப் படுத்தப்பட் டது.



வக்னர் குழுவினர் ஆயுதங்களை போட்டுவிட்டு தளம் திரும்புமாறு பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்தது. ஆனால் வக்னர் குழுவின் டாங்கிகள் நகரங்களுக்குள் ஊடுருவின, தோள்களில் இக்லா வகை விமான எதிர்ப்பு ஆயுதங்களுடன் வக்னர் படையினர் வீதிகளில் பெருமளவில் காணப்பட்டனர்.

காலை ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பூட்டின் இது ஒரு துரோகம் எனவும் தாம் முதுகில் குத்தப்பட்டதாகவும் தெரிவித்ததுடன் கடும் பதிலடி தரப்படும் எனவும், இதில் ஈடுபட்டவர்கள் அனைவரும் தண்டிக் கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.


ஆனால் பிற்றேஸ்பெர்க்கில் இருந்த வக்னர் குழுவின் தலைமையகம் அமைதியாகவே இருந்தது. ரஸ்யாவில் உள்நாட்டுப் போரை ஏற்படுத்தும் முயற்சி இது என ரஸ்யாவின் வெளியக புனலாய் வுத்துறையான எஸ்.ஆர்.வி தெரிவித்தது. அருகில் இருக்கும் துருக்கிக்கு நிலைமை விளங்கப் படுத்தப்பட்டது. மொஸ்கோவில் இருந்து 370 கி.மீ தொலைவில் உள்ள லிபெஸ்க் நகர் நோக்கி வக்னர் குழு முன்நகர்ந்தது. ரஸ்யாவுக்கு ஆதரவு தருவதாக ஈரான் அறிவித்தது. திங்கட்கிழமை விடுமுறையாக மொஸ்கொ அறிவித்தது. தென்பகுதி நகரத்தில் துப்பாக்கி மற்றும் குண்டுச்சத்தங்கள் கேட்டன.



அமெரிக்க, பிரான்ஸ், ஜேர்மனி, பிரித் தானியா தலைவர்கள் காணொளியில் கலந்து ரையாடினர். மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவிருந்த அமெரிக்காவின் முப்படைகளின் தளபதி ஜெனரல் மாலிக் தனது பயணத்தை இரத்துச் செய்தார். வக்னர் குழு மீது அமெரிக்கா கொண்டுவர திட்டமிடப்பட்ட தடை கள் பிற்போடப்பட்டன.

ஆனால் களமுனையில் செச்சென்யாவின் இரண்டு பற்றலியன் சிறப்பு படையினர் வக்னர் குழுவை தடுப்பதற்காக களமிறக்கப்பட்டனர்.

சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பெலாரூஸின் தலைவர் லுகசன்கொ பூட்டீனுடன் பேசி பிறிகோசின் உடன் தான் பேசுவதாக கூறினார், அதன் பின்னர் பிறிகோசினுடன் பேசி ஒரு உடன்பாட்டை எட்டினார். மாலை 7 மணியள வில் தமது முன்நகர்வை நிறுத்திய வக்னர் குழு வெளியேற ஆரம்பித்தது.



வக்னர் குழு பெலாரூஸ் பகுதிக்கு நகர்த்தப் படுவதாகவும், அவர்கள் மீதான வழக்குகள் கைவிடப்படுவதாகவும் ரஸ்யாவின் பேச்சாளர் டிமிற்றி பிரஸ்கோ சனிக்கிழமை மாலை தெரிவித்தார்.

ரஸ்யாவின் வீழ்ச்சி உறுதியானது என மேற்குலகமும், பல நாடுகளும் நம்பி நிற்கையில் 50,000 வக்னர் இராணுவத்தின் நடவடிக்கை 24 மணி ரேத்தில் முடிவுக்கு வந்தது பலருக்கும் ஆச்சரியம். நேட்டோ கூட்டமைப்பு உட்பட 50 இற்கு மேற்பட்ட நாடுகளின் ஆயுதங்களும், நிதி வளமும் வற்றிப் போகும் அளவுக்கு ஒரு போர் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இடம்பெற்று வருகின்ற நிலையில் மிகப்பெரும் போரில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டின் மீது அந்த நாட்டின் நம்பிக்கைக்குரிய படையணி உள்ளக தாக்குதலை நடத்தினால் போரின் போக்கே தலைகீழாக மாறுவதுடன், அந்த நாடும் தப்பிப்பிழைப்பது கடினம்.

ஆனால் அங்கு களமுனைகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. உலகின் வரலாற் றில் போரின் போது ஒரு படைத்துறை புரட்சியை முறியடித்த முதல் நாடாக ரஸ்யா தாக்குப்பிடித்துள்ளது. அதாவது படைத்துறை புரட்சியின் மூலம் ரஸ்யாவின் மதிப்பை மழுங்கடித்துவிடலாம் என நினைத்தவர்களுக்கு அதனை மிகவும் இலகுவாக கையாண்டு மிகப்பெரும் இரத்தக்களரியை புத்திசாலித்தனமாக தடுத்த மதி நுட்பம் பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

ஆனால் படைத்துறை ரீதியான பார்க்கும் போது வக்னர் குழுவால் ரஸ்ய படையினரை வெற்றிகொள்ள முடியுமா என்றால் அது சாத்தியமற்றதொன்றே. 25,000 சிறைக் கைதிக ளையும், 25,000 படையினரையும் கொண்ட இந்த குழு 1.1 மில்லியன் படையினரை கொண்ட ரஸ்ய இராணுவத்தை எதிர்கொள்வது கடினம். மேலும் வக்னர் குழுவிடம் டாங்கிகள் கவச வாகனங்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

சிறீலங்கா முன்... தொடர்ச்சி ...

செஞ்சோலைக்கிராமத்தில் உள்ள பெண்களுக்கான சிறுவர் இல்லத்தில் தாக்குதலை மேற்கொள்ள சிறீலங்கா விமானப்படை இந்தக் கிபீர் விமானங் களைப் பயன்படுத்தியிருந்தது. மிக குரூரமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்தத் தாக்குதலில் 60 பெண்பிள்ளைகள் கொல்லப்பட்டு, நூற்றுக்கணக்கானோர் காயங்களுக்கு உள்ளாகி யிருந்தனர்.

அப்பாவிப் பொதுமக்கள் மேல் தாக்குதல் களை மேற்கொண்டு, பல்லாயிரக்கணக் கான அப்பாவிப்பொதுமக் களைக் கொன்றொழித்த சிறீலங்கா அரசுக்கு, வேறு பல நாடுகளும் ஆயுதங்களை விற்பனை செய்ததுடன் பயிற்சியை யும் வழங்கியிருந்தன. இது எவ்வாறிருப்பினும் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஆய்வாளரான ஷ்லோமி யாஸ் (Shlomi Yass) என்பவரின் கூற்றுப்படி, வழங்கப்பட்ட ஆயுதங்களையும் அவற்றின் பெறுமதியையும் உற்றுப் பார்க்கும் போது, மற்ற எல்லா நாடுகளையும் விட இஸ்ரேலின் பங்கே இவ்விடயத்தில் முதன்மையானதாகும்.

இஸ்ரேலுக்கான சிறீலங்காவின் தூதரக பணியாளர்களின் தலைவராக இருந்த, போர் முடிந்த பின் நியமிக்கப்பட்டிருந்த டொனால்ட் பெரேரா (Donald Perera) இதனை உறுதிசெய்திருந்தார்.

இஸ்ரேலின் வைநெற் செய்தி ஊடகத் தின் (Israeli Ynet News) இணையத்தளத்தில் பதி வேற்றம் செய்யப்பட்டிருந்த நேர்காணலில் "பயங்கர வாதத்துக்கு எதிராக நாங்கள் முன்னெடுத்த போரில் எங்களுக்குத் தேவைப்பட்ட தகவல்களை எங்களுக்குத் தந்தது மட்டுமன்றி, இராணுவ தொழில்நுட்பத்தையும் உபகரணங்களையும் எமக்கு வழங்கி இஸ்ரேல் எமக்கு உதவிசெய்திருந் தது. கடந்த சில வருடங்களாக பல பில்லியன்கள் டொலர்கள் பெறுமதியான உதவிகள் எங்களுக்குக் கிடைத்திருந்தன" என்று டொனால்ட் பெரேரா கூறியிருந்தார்.

### இஸ்ரேலிலும் சிறீலங்காவிலும் நீதிக்கான போராட்டம்

சிறீலங்காவில் நடைபெற்ற போரிலே இழைக் கப்பட்ட குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றின் அறிக்கைகள் ஏராளமாக இருக்கின்ற போதிலும் கூட, இந்தக் குற்றங்களுக்கு நேரடியாகப் பொறுப்பானவர்களில் ஒருவருக்கு எதிராகவோ அல்லது மறைமுகமாக சிறீலங்காவுக்கு உதவியவர்கள் மீதோ இதுவரை எந்தவகையான சட்ட நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை.

2011ம் ஆண்டு ஊடகங்களுக்கு கசிந்த ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கை ஒன்று, பொதுமக்களைப் பாதுகாக்க அந்த அமைப்பு தவறியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியது. போர்க்காலத்தில் பொதுமக்களைக் காக்கத் தவறிய ஐக்கிய நாடுகள் தாபனம் அந்த மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கும் மனிதாயத்துக்கு எதிரான நீதியையும் பெற்றுக் கொடுக்கத் தவறியிருக்கிறது.

பேச்சளவில் மனித உரிமைகளின் காவலர்களாகத் தோற்றமளிக்கும் மேற்கத்தைய நாடுகள், சிறீலங்கா அரசுடன் தமது பொருண்மிய, இராணுவ, அரசியல் நலன்கள் விடயத்தில் எதுவுமே நடக்கவில்லை என்ற பாணியில் தொடர்ந்து நடந்துவருகின்றன.

இவ்வாறான ஒரு அணுகுமுறை, அப்பாவிப் பொதுமக்கள் மீதான குரூரமான தாக்குதல்களை மேற்கொண்டுவிட்டு, எந்தவி தமான தண்டனையையும் சந்திக்காமல் தப்பி விடலாம் என்ற எண்ணத்தை சர்வாதிகாரிகளுக்கும் அடக்குமுறை அரசுகளுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே போர்க்குற்றங்களை இழைத்த சிறீலங்கா அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்குத் துணைபோனவர்களாக இருந் தாலும் சரி, சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது.

கடந்த சில வருடங்களாக பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேல் அரசின் நிறவெறி, இனவெறிக்கொள்கைகளுக்கு எதிராகவும், மனிதாயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் போன்றவற்றுக்கு எதிராகவும் குரல்கொடுத்து வருகின்ற இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கும், 2009 மே மாதத்துக்கும் இடையேயான காலப்பகுதியில் சிறீலங்காவின் உள்நாட்டுப் போரில் இஸ்ரேல் வகித்த பங்கைப் பற்றிய தகவல்களைத் திரட்டியிருக்கிறார்கள்.

அப்பாவிப் பொதுமக்கள் மீது இழைக் கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் தனிநபர்கள் மீது பன்னாட்டுச் சட்டத்தின் கீழும், இஸ்ரேலின் தண்டனைச் சட்டத்தின் கீழும் குற்றவியல் விசாரணையை ஒன்றைத் தொடங்குவதற்குத் போதியளவு ஆதாரங்கள் ஏற்கனவே கிடைத்திருக்கின்றன. சிறீலங்காவில் இழைக்கப்பட்ட குற்றங்களில் சம்பந்தப்பட்ட இஸ்ரேலியருக்கு எதிராக ஒரு குற்றவியல் விசாரணையைத் தொடங்கக் கோரி, இஸ்ரேலிய சட்டமா அதிபருக்கு ஒரு கோரிக் கையை முன்வைப்பதற்கு நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். பன்னாட்டளவிலும், இதை நாங்கள் முன்னெடுக்க இருக்கிறோம்.

இவ்வாறான குற்றங்களுக்கு எதிராகச் சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இருப் பினும் எமது முயற்சியை நாங்கள் கைவிடப் போவதில்லை. ஒரு வேளை, சிறீலங்காவில் இழைக்கப்பட்ட குற்றங்களை உலகம் காத்திரமாக எடுத்திருக்குமானால், சிரியாவில் பாஷர் அல்-அஷாட், தென் சூடானில் சால்வா கீயிர், மியான்மாரில் மீன் அவுங் ஹ்ளேங், உக்ரேனில் புட்டின் போன்றவர்கள் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான குற்றங்களை இழைப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருந்திருக்கும். அதுமட்டுமன்றி, காஸா மற்றும் மேற்குக் கரைப் பிரதேசங்களில் இஸ்ரேலும் தொடர்ந்து குற்றங்களை இழைக்கும் வாய்ப்பும் இல்லாமல் போயிருக்கும்.

அடக்குமுறை, வன்முறை என்பவற்றுக் கான தொழில்நுட்பங்கள் உலகமயமாக்கப்படும் போது, பொறுப்புக்கூறல் செயற்பாடும் நிச்சயமாக உலகமயமாக்கப்படவேண்டும்.

**நன்றி: அல்ஜஸீரா**

வக்னர் குழுவின் ... தொடர்ச்சி ...

இருந்தபோதும் அவர்களிடம் வான்படையோ, நவீன ஏவுகணைகளோ இல்லை. எனவே தான் நாங்கள் 25,000 பேரும் நீதிக்காக போராடி இறக்க தயார் என பிறிகோசின் தெரிவித்திருந்தார். அதாவது மோதல் ஏற்பட்டால் தாம் அனைவரும் இறப்பது உறுதி என அவருக்கு தெரிவித்திருந்தது. எனவே தான் லுகசன்கோ வழங்கிய திட்டத்தை அவர் ஏற்றுக்கொண்டார்.

ஆனால் இந்த நடவடிக்கையை பொறுத்த வரையில் பல விடைதெரியாத கேள்விகள் தொங்கி நிற்கின்றன.

அதாவது ரஸ்ய படையினரின் எதிர்ப்புக்கள் இன்றி எவ்வாறு அவர்கள் ரஸ்யாவினுள் பல நூறு கி.மீ தூரம் நகர்ந்தார்கள். அவர்களின் நகர்வை ரஸ்யாவின் புலனாய்வுத்துறை அறியவில்லையா? ஒரு இரு இடங்களில் மோதல்கள் இடம்பெற்றன. வீதி குண்டு வீசி தகர்க்கப்பட்டது. ரஸ்யாவின் கே.ஏ-52 ரக உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப் பட்டது, இரண்டு விமானிகள் கொல்லப்பட்டனர். இவைதவிர பெரிதாக மோதல்கள் இடம்பெற வில்லை.

மேலும் வக்னர் குழுவினர் மீது ரஸ்யா மேற்கொண்ட வழக்குகள் கைவிடப்பட்டுள்ளன. அதாவது ஒரு நாட்டின் மீது படைத்துறை புரட்சியில் ஈடுபட்டவர்கள் ரஸ்யாவின் வரலாற் றில் இலகுவாக மன்னிக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமல்லாது, பக்மன்ட் களமுனை யில் வக்னர் குழு மோதலில் ஈடுபடுத்தப்பட்ட போதே முறுகல் நிலை ஆரம்பமாகியபோதும், அவர்கள் அந்த களமுனையை வெற்றிகொண்டு ரஸ்ய படையினரிடம் கையளித்திருந்தனர். தற்போது அவர்கள் ரஸ்யாவின் அணுவாயுதம் புதிதாக நகர்த்தப்பட்ட பெலாரூஸ் பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளனர்.

உண்மையில் வக்னர் குழுவினர் ரஸ்யா வுக்கு எதிரானவர்கள் எனில் தனது ஆணுவாயுதம் உள்ள பலவீனமான களமுனைக்கு அவர்கள் செல்ல அனுமதிக்கபட்டிருக்க மாட்டார்கள். அது மட்டுமல்லாது, வெனிசுலாவில் இருந்து சூடான், மாலி, சிரியா, லிபியா உட்பட பல நாடுக ளில் பயிற்றியாளர்கள் என்ற போர்வையில் நடவடிக் கைகளில் ஈடுபட்டுவரும் வக்னர் குழுவினரின் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் ரஸ்யா தெரிவித்துள்ளதுடன், அதன் நடடிக்கைகள் லத்தின் அமெரிக்க நாடுகளிலும் விரிவாக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.



உக்ரைன் மீதான 2014 ஆம் ஆண்டு ரஸ்யா மேற்கொண்ட படை நடைவடிக்கையின் போது உருவாக்கப்பட்ட வகனர் குழுவின் ரஸ்ய அதிபரின் நம்பிக்கைக்குரிய சமையல்காரரின் தலைமையில் உருவாக்கப்பட்டது. ஒருவர் தனது பாதுகாப்பு தொடர்பில் அதிகம் நம்புவது, பாதுகாப்பு அமைச்சர், சமையல்காரர் மற்றும் புலனாய்வுத்துறை தலைவர். எனவே ரஸ்யாவுக்கு எதிரான அதன் நடைவடிக்கை என்பது சந்தேக மாகவே பார்க்கப்படுகின்றது.

மறுவளமாக இது இருதரப்பு நாடக மாக இருந்தால் ஏன் இந்த நடவடிக்கை தோற்று விக்கப்பட்டது என்ற கேள்விகள் எழுகின்றன. பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. பக்மன்ட் களமுனையை வெற்றிகொண்ட ஏறத்தாள இரண்டு டிவிசன் படையணிகள் சத்தமின்றி உக்ரைனின் தலைநகர் கிவ் இற்கு அண்மையாக உள்ள பெலாரூ சுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதாவது கிழக்கு உக்ரேன் பகுதியில் தனது படையினரை குவித்துள்ள உக்ரைனுக்கு இது புதிய களமுனையை திறந்துள்ளது. மேலும் லற்வியா, போலந்து, லுத்துவேனியா ஆகிய நாடுகளின் எல்லைகளை கொண்ட பெலாரூஸில் இந்த அணி நிலைகொண்டிருப்பது நேட்டோ படையினருக்கு பலத்த நெருக்கடியாகும். அதனை அதான் ஜேர்மன் மற்றும் நேட்டோவின் தலைவர்கள் கூறியுள்ளனர். மேலும் இவ்வாறான ஒரு புரட்சி ஏற்படும் போது பூட்டினுக்கும், ரஸ்யாவுக்கும் எதிரானவர்கள் அதில் இணைகிறார்களா, யார் இணைகிறார்கள் என்பதை பரிசோதிக்கும் நடவடிக்கையாகவும் ரஸ்யா இதனை பார்த்திருக்கலாம் எனவும் கூறப் படுகின்றது.

அதாவது ரஸ்ய அதிபரின் நடவடிக்கையை புரிந்து கொள்வது மிகவும் கடினமாக இருப்ப தாகவும், அதனால் தான் தம்மால் வெற்றிபெற இயலவில்லை எனவும் கடந்த வருடம் உக்ரைன் அதிபர் செலன்ஸ்கி தெரிவித்தது போலவே இந்த நடவடிக்கையும் உலக படைத் துறை வல்லுனர்களுக்கும், வியூகங்களை வகுப்பவர் களுக்கும் மிகப்பெரும் குழப்பங்களை உருவாக்கி யுள்ளது.

• • •

## உரிமைகளும்... தொடர்ச்சி ...

பெருந்தோட்ட தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அது இன்னும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது. லயன் வீடுகளை அமைக் கக்கூடாதென அரசாங்கம் ஏற்கனவே சட்ட மியற்றியுள்ளது. தனித்தனி அல்லது இரட்டை வீடுகளை ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஏற்ற முறையில் அமைக்குமிடத்து நிர்வாகம் பின்வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் என்று கருதியது. இதற் கேற்ப வீட்டு வசதிக்காக பெரும் முதலீடு ஒதுக் கப்பட வேண்டும். தொழிலாளர்கள் மீதான மத்தியபடுத்தப்பட்ட கட்டுப்பாடு தளர்ந்துவிட நேரிடும் போன்ற அச்சங்கள் நிர்வாகத்திடம் காணப்பட்டன. இதனால் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் உரிய அக்கறையை வெளிப்படுத்தவில்லை.

*1971ம் ஆண்டு இடம்பெற்ற சமூக பொருளாதார அளவீட்டின்படி 85 சதவீதமான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்த வீடுகளில் 89 வீதமானவை லயன் வீடுகளே என்று தெரியவருகின்றது. இதேவேளை தோட்ட மக்கள் தொகையில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஒரு அறை மாத்திரம் கொண்ட வீடுகளிலேயே வாழ்ந்தனர். 1971 இல் இரண்டு அறைகளைக் கொண்ட வீடுகளில் 33.3 வீதமான குடும்பங்களும், 1981/82 இல் 45.4 வீதமான குடும்பங்களும் வாழ்ந்தனர். 1971 இல் மூன்று அறைகளைக் கொண்ட வீடுகளில் 11.8 வீதமான குடும்பங்கள் வாழ்ந்தன. 1971 - 1981 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பெருந்தோட்ட வீடுகளில் 8.1 வீதமானவை அழிவிற்குள்ளாகின. 2009 ம் ஆண்டு தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கணிப்பின்படி இரண்டு இலட்சம் லயன் வீடுகளில் பெரும்பகுதி 150 வருட பழைமை வாய்ந்தவை என்று தெரியவருகின்றது. எனவே ஆட்சியாளர்கள் பெருந்தோட்ட மக்களின் வீட்டுரிமைக் கனவைமழுங்கடித்து அவர்களை நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கியுள்ளனர்.*

இதைப்போன்றே சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளுக்கும் மலையகத்தில் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடரு மானால் மலையக சமூகம் எதிர்காலத்தில் பல்வேறு சிக்கல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய அபாயநிலை மேலோங்கும் என் பதனை மறுப்பதற்கில்லை. இதனிடையே தோட்டத் தொழிலாளர்களுக்கான பல்வேறு உரிமைகளையும் அரசாங்கம் உறுதிப்படுத்தப் போவதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன உறுதி யளித்துள்ளார். அரசாங்கத்தின் இந்த வாக்குறுதி ஏட்டளவில் முற்றுப்பெற்றுவிடாது செயல் வடிவம் பெறவேண்டும் என்பதே சகல ரினதும் எதிர்பார்ப்பாகும்.

• • •

## வடக்கை நோக்கி... தொடர்ச்சி...

சென்றடையவுள்ளது.

*குறித்த பாத யாத்திரையில் 50 இற்கு மேற்பட்ட பௌத்த மதகுருக்கள், மறைந்த பௌத்த மதகுருக்களின் கேசம், பற் சின்னம் உள்ளிட்ட புனிதப் பொருட்களுடன் சென்று அதனை அங்கு பார்வைக்கு வைப்பதுடன், எதிர்வரும் போயா தினத்தன்று விசேட பூஜை நிகழ்வையும் நடத்தவுள்ளனர்.*

## அவுஸ்திரேலியா .. தொடர்ச்சி ...

தீவுகளுக்கு வந்துள்ளார்.

*அவுஸ்திரேலியா நீண்டகாலமாக பாது காப்பு உடன்பாடுகளை பேணி வருவதுடன், அதிக நிதிகளையும் சொலமன் தீவுகளுக்கு வழங்கி வருகின்றது. அரசுக்கு எதிரான போராட்டங்களை அடக்கும் நோக்கத்துடன் அங்கு 2021 ஆம் ஆண்டில் இருந்து அது படை யினரையும் நிறுத்தி வைத்துள்ளது. எனினும் கடந்த வருடம் சீனாவுடன் சொகவரே பாது காப்பு உடன்பாடு ஒன்றை மேற்கொண்டது அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.*

இந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து சீனாவின் காவல்துறையினர் சொலமொன் தீவுகளின் காவல்துறையினருக்கு பயிற்சிகளை வழங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## Club De Paris ... தொடர்ச்சி ...

**5.** அவசரகால விதிகளின் கீழ் தேவைப் பட்டால் தவிர, வணிக முயற்சிகள், கட்டுமான ஒப்பந்தங்கள் மற்றும் இதேபோன்ற சிவில் மேம்பாட்டு நடவடிக்கைகள் போன்ற பாதுகாப்பு அல்லாத விடயங்களில் இராணுவத்தை உட் படுத்துவது நிறுத்தப்பட வேண்டும். சிவில் நடவடிக்கைகளை இராணுவ மயமாக்குவது இலங்கையின் பாதுகாப்பு வரவுசெலவுத் திட்ட அதிகரிப்புக்கு ஒரு முக்கிய காரணியாகும்.

**6** பின்வருவனவற்றில் கவனம் செலுத் துவதன் மூலம் முறையான மதிப்பாய்வுகளை நடத்த வேண்டியது அவசியம்:

**அ. எவ்வளவு நிதி போதுமானது?**

**ஆ. எப்படி சிறந்த முறையில் செலவு செய்வது?**

இலங்கையின் பாதுகாப்பு செலவினத்தை ஆய்வுசெய்வதற்கு ஆவன செய்யப்படவேண்டும் என டிரான்ஸ்பரன்சி இண்டர்நேஸனல் பகுப் பாய்வு இந்த கருத்தை உறுதிப்படுத்துகிறது.

*'2015 ஆம் ஆண்டின் பாதுகாப்பு ஊழல் தடுப்பு அறிக்கையானது இலங்கையில் 'பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் துறையில் ஊழலுக்கான மிக அதிக ஆபத்து' இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இலங்கைக்கான மூன்று முக்கிய 17 பரிந்துரைகளில், இரண்டு வரவுசெலவுத் திட்ட வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பது மற்றும் சட்டமன்ற ஆய்வுக்கான பொறிமுறைகளை உரு வாக்குவது பற்றியவை ஆகும்.*

மேற்கூறியவற்றின் அடிப்படையில், முறை யற்ற மூலோபாயத்துடன் இலங்கையில் தேவை யற்ற இராணுவச் செலவுகள், இலங்கையில் நிதி நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தியுள்ளன என்பது ஐயத்திற் கிடமின்றி தெளிவாகிறது.

இலங்கையை காப்பாற்ற உலக வங்கி முயற்சிகள் எழுப்பதற்கு முன்னர் இலங்கையை தற்போதைய இக்கட்டான நிலைக்கு இட்டுச் செல்லும் சமகால பதிவுகளை பாரிஸ் கிளப் மீளாய்வு செய்வது நல்லது.

- **கொள்கை ரீதியான நெருக்கடிகள்.**
- **பொருளாதார நெருக்கடிகள்.**
- **அரசியல் ரீதியான நெருக்கடிகள்.**

மேற்குறிப்பிட்ட காரணிகளைக் கருத்தில் கொண்டு, பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மட்டு மன்றி, இலங்கையில் அமைதி, நீதி, சமத்துவம், சுபீட்சம், சமாதானம் ஆகியவற்றை நிலைநாட்டும் வகையில் பன்மைத்துவ சமூகத்தை வாழ வழிவகுக்கும் வகையில் இலங்கை மீது உரிய நிபந்தனைகளை விதிக்குமாறு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை சார்பாக பாரிஸ் மன்றத்தை (Club De Paris) வலியுறுத்துகிறோம்.

• • •

## வடக்கு கிழக்கில்... தொடர்ச்சி ...

உருவாகும் வாய்ப்புகள் உள்ளது. இதன் மூலம் எஞ்சியுள்ள தமிழர்களின் நிலங்களை பாதுகாப்பதற்கான சூழ்நிலையும் உருவாகும். நிலைமையினை உணர்ந்துசெயற்படமுன்வர வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைக் கின்றோம்.

• • •

## தொழிற்சாலை ... தொடர்ச்சி...

மற்றும் கிருமிநாசினிகள் தயாரிப் பதற்கு பயன்படுத்தப்படுவதுண்டு. இதே போன்று கடந்த வருடம் கம்பியா நாட்டில் மற்றுமொரு இந்திய நிறுவனம் தயாரித்த இருமல் மருந்தினை உட்கொண்ட 66 சிறுவர்கள் உயிரிழந்திருந்தனர்.

இந்திய மருந்து நிறுவனங்களின் சந்தை வாய்ப்பு கடந்த 2021 ஆம் ஆண்டு 41 பில்லியன் டொலர்களை எட்டியிருந்தது.

## விரைவில் மிகப் ... தொடர்ச்சி ...

நிதிக் கட்டுப்பாடுகளை இறுக்குவதும், உலக நாடுகளின் பார்வைக்கேற்ப பொருளாதார நடவடிக்கைகளை மறுசீரமைக்காததுமே தற்போதைய நிலைக்கான காரணம். அமெரிக்கா பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தமது வட்டி விகிதத்தை அதிகரித்து வருகின்றன. இந்த வட்டி விகித அதிகரிப்பு மற்றும் பணவீக்கம் மேலும் சில காலம் நீடிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்நாட்டுக் ... தொடர்ச்சி ...

வரும் நாட்களில் முன்னெடுக்கப்படும் கடன் மறுசீரமைப்பு திட்டமானது, வெளிநாடுகள் மற்றும் வெளி நாட்டு நிறுவனங்களுக்கு தொடர் புப்படாது.

இது உள்நாட்டு கடன் வழங்குநர்களுக்கே தாக்கத்தை செலுத்தும். வெளிநாட்டு கடன் வழங்குநர் களுடனான கடன் மறு சீரமைப்பு குறித்து அரசாங்கம் தற்போது கலந்துரையாடல் களை நடத்தி வருகின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடனை மீள செலுத்த முடியாது எனவும், தம்மால் குறிப்பிட்டளவு தொகையையே மீள செலுத்த முடியும் எனவும் கூறுவதே இந்த கடன் மறுசீரமைப்பு திட்டம்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான நடவடிக்கைகளினால், ஏதோ ஒரு வகையான பெரிய பாதிப்பு வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகவே நான் கருதுகிறேன்.

## மணிப்பூர் ... தொடர்ச்சி ...

வேண்டுகோள் விடுத்து வரும் கோரிக்கைகள்:

தலைமையமைச்சர் வாய்திறந்து பேசவும் மணிப்பூரின் நடப்பு நிலைமைக்குப் பொறுப் பேற்கவும் வேண்டும்; உண்மைகளை நிறுவவும், நீதிக்கான அடித்தளத்தை அணியமாக்கவும், மணிப்பூரில் இரு சமுதாயங்களையும் வேறுபடுத் தும் கொடும் புண்ணை ஆற்றவும், தூண்டி வளர்க்கப்படும் பிரிவையும் வெறுப்பையும் தணிக்கவும்... நீதிமன்றக் கண்காணிப்பில் ஒரு சிறப் புத் தீர்ப்பாயம் அமைக்கப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் ஆய்தப் படைகள் சிறப்ப திகாரச் சட்டத்தின் ஆளுகையில் மணிப்பூரில் இந்திய இராணுவத்தினர் செய்த பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக மணிப்பூர் பெண்கள் நடத்திய (இரோம் சர்மிளாவின் பட்டினிப் போர் உள்ளிட்ட) போராட்டங்கள் உலகறிந்த நிகழ்வுகள். இப்போதும் மோதல் பகுதிகளில் பெருமளவில் பாலியல் குற்றங்கள் நடந்துள்ளன. இந்தக் குற்றங்களை விரைவு நீதிமன்றம் அமைத்து நீதி வழங்க வேண்டும். ஏதிலியர் வீடு திரும்ப அமைதியான சூழல் ஏற்படச் செய்ய வேண்டும்.

மணிப்பூர் மக்களுடன், குறிப்பாக இன வழிப்புக்கு ஆளாகி வரும் பழங்குடிகளுடன் தமிழ் மக்கள் தோழமை கொள்ள வேண்டும்.

இன்றைய மணிப்பூர் நாளை இந்தியா ஆகலாம். பாசக-ஆர்எஸ்எஸ் பிரித்தாளும் அரசியல் தமிழ் மக்களையும் பிரித்தாள முற்படும். மணிப்பூர் நமக்கு ஒலிப்பது எச்சரிக்கை மணி!

• • •

## இளையோரே சிகரம் நீங்கள்

# சுயநலமற்ற பொதுநல சமூகத்தை உருவாக்குவோம்

கவிதா ஆல்பர்ட்

உலகில் வாழும் மனிதன் உயர்திணையாக வரையறுக்கப்பட்டிருக்கிறான். உயர்திணையாக வரையறுக்கப்பட்டுள்ள மனிதனின் குணாதிசயங்களும், பண்புகளும் இன்று உயர்நிலையில் உள்ளனவா? என்று ஆராய்வோமானால், இல்லை என்பதே பெரும்பாலான பதிலாக இருக்கிறது.

ஏனிந்த முரண்பாடுகள்? மனிதன் மனித குலத்துக்கே எதிரியாவதற்குக் காரணம் என்ன? மனிதனை மனிதன் அழிக்கும் அளவுக்கு மனித குலம் மாறிவருவது எதனால்? அதிலும் இன்று இளையோர் மனங்கள், இரும்பாக மாறும் அளவுக்கு சூழ்நிலைகள் மாறிவருகின்றன.

இதற்கு யார் காரணம்? சுயநல சிந்தனைகள் இளையோர் மனங்களையும் ஆக்கிரமிப்பு செய்வது ஏன்? இலக்கு நோக்கிப் பயணித்து, இலட்சியத்தை அடையவேண்டிய இளையோர், பணத்துக்காகவும், பகட்டான வாழ்வுக்காகவும் சுயநலவாதிகளாக மாறிவருகின்றனர்.



சர்வாதிகாரிகளின் கரங்களில் கூலிப் படைகளாக, கொடியவர்களின் கரங்களில் கொன்றழிக்கும் கொடியவர்களாக மாறிவரும் அவலத்தைக் காண்கிறோம். சுயநல சிந்தனையும், அணுகுமுறையும் என்றுமே சுயநலவாதிகளுக்கும் அவர்களைச் சார்ந்த சமூகத்துக்கும் நன்மை ஏற்படுத்துவதாக மாறுவதில்லை. மாறாக அதன் முடிவும் விளைவும் மிகப் பயங்கரமானதாக இருப்பதை நாம் காண்கிறோம்.



அதற்கு மிகச் சிறந்த உதாரணம் இன்று உக்ரைனை எதிர்த்துப் போரிடும் ரஷ்யாவின் கூலிப்படைகளாக இருக்கும் வாக்னர் படை அணியை எடுத்துக் கொள்ளலாம். வறுமையும் வழிகாட்டுதலின்மையும் இன்று அவர்களைத் தவறான பாதையில் கொண்டு சென்று மரணபயத்தை ஏற்படுத்தும் கொலைக்களத்தில் கொண்டுநிறுத்தியுள்ளது.

"ஒருபுறம் வேடன். மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவில் அழகிய கலைமான்" என்கிற நிலையில் தான் இது போன்ற அமைப்புக்குள் அடங்கியவர்களின் நிலை இருக்கிறது. இதை உணராமல் இளையோர் பலர் விட்டில் பூச்சிகளாய்த் தங்கள் வாழ்வைப் பலிகொடுத்து வருகின்றனர்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை நாம் உணரவேண்டும். சவால்களும் சங்கடங்களும் எதிர்வரலாம். ஆனால் நாம் இலட்சியப் பறவைகளாக இருக்க வேண்டும். இலக்குத் தெரியாத பறவைகளாகப் பறக்க நினைத்து சிறகொடிந்து விழும் நிலைக்கு ஆளாகக்கூடாது.

பரந்த உலகம் நமது பார்வைக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. நாம் உயர்ந்து பறப்பதற்கான சிகரமும் நம்முன் உயர்ந்து எழுந்து நிற்கிறது. இப்படியிருக்கையில், அன்பு இளையோரே, நீங்கள் ஏன் எலிப்பொறியில் மாட்டிக்கொண்டு, எலிகளைப் போல பிறர்விரிக்கும் வலையில் மாட்டி வாழ்வைத் தொலைக்கின்றீர்கள்?

இன்று பல இளையோர் பாதை மாறிச் செல்வதற்கான காரணம் கேட்டபோது, தங்களது பயணப் பாதையை வரையறுத்துக் கொடுப்பதற்கான வழிகாட்டிகளும் இல்லை. திசைமாறிச் செல்வதைக் கண்டு, தடுத்து, நேரிய வழியில் செல்வதற்கு வலியுறுத்துவதற்கான சமூக ஆர்வலர்களும் இல்லை என்கிற குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றனர்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பற்றி அக்கறைகொள்ளாதது முதற்காரணம் என்கின்றனர். பெற்றோரின் தவறான வாழ்க்கைமுறை பிள்ளைகளின் நலனில் அக்கறையின்றி சுயநலத்துடன் வாழும் மனநிலை. பிள்ளைகளின் எதிர்கால நலன்களுக்காக ஒதுக்கி வழிநடத்த முன்வராத நிலை, சமூகத்தில் நிலவிவரும் சமூக சீர்கேடுகள் காரணமாக மதிப்புமிகு வாழ்க்கையின் மதிப்பீட்டை உணர பெரும்பாலான இளையோர் தவறிவருகின்றனர்.



இதனை அறியாமை நிலை என்று நாம் வரையறுக்கலாம். ஆனால் இந்த அறியாமை நிலையில் பெற்றோரும், சமூகமும் இளையோரை வைத்திருக்க நினைப்பது மிகப்பெரிய சவாலைப் பூமி சந்திப்பதற்கான ஒரு சோதனையான முன்னோட்டமாக அமைந்துவிடும் என்பதை எல்லோரும் உணரவேண்டும்.

அன்பு இளையோரே, சவால்கள் நடுவில் சரித்திரம் படைப்பதே மிகப்பெரிய சாதனை. அந்தச் சாதனை மைல்கல்லை அடைவதற்காக ஒவ்வொரு இளையோரும் தங்களைச் சுற்றி வலைப்பின்னல்களாக இருக்கும் சவால்களை மிகுந்த எச்சரிக்கையுடனும், பொறுப்புடனும் ஞானத்துடனும் எதிர் கொண்டு வெற்றி என்னும் இலக்கை அடைய முன் வர வேண்டும்.

அறிவியல் உலகின் வளர்ச்சி நம்மைப் பிரமிக்கச் செய்தாலும் அதன் விளைவுகளைக் குறித்து நாம் விவேகமாகச் சிந்திக்க வேண்டும். அப் போது தான் நம்மால் புரிந்துகொள்ள முடியாததும், அறிந்துகொள்ள முடியாததுமான பல கேள்விகளுக்கு நம்மால் விடைகண்டுபிடிக்க முடியும். ஆக்கம் சேர்ப்பது எது, அழிவுக்குரியது எது என்பதை இன்று நீங்கள் தான் கண்டுபிடிக்கும் நிலையில் இருக்கிறீர்கள். உங்கள் பயணப் பாதையில் வழிகாட்டிகள் இல்லை என்று கலங்கி நிற்காமல் வழித்தடங்களை உருவாக்க முயலுங்கள். அடைய நினைத்த இலக்கை நிச்சயம் அடைவீர்கள்.

பணத்தை மையப்படுத்திய வாழ்வுக்கு முக்கியம் அளிக்காமல், மனிதநேயத்தை மையப்படுத்திய வாழ்வுக்கு முக்கியத்துவம் அளித்து, வெற்றி என்னும் இலக்கை அடைய முயற்சி செய்யுங்கள். சுயநல எண்ணங்களையும் பார்வையையும் நீங்கள் மாற்றினால் தான் பொதுநல நோக்கம் சாத்தியமாகும்.

நீங்கள் சுயநல எண்ணங்களைச் சுட்டெரித்தால் தான் பொதுநல சமூகத்தை உங்களால் உருவாக்க முடியும். அடுத்தவர்களை அழித்து வாழ நினைக்கும் அவல வாழ்வை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். பாதையில் நீங்கள் விழிப்புடன் பயணம் மேற்கொண்டால் தான் சேருமிடத்தைச் சேதமின்றிச் சென்றடைய முடியும்.

நல்லதை நீங்கள் விதைத்தால் தான், நல்லதை நீங்கள் அறுவடைசெய்ய முடியும். ஆகவே நீங்கள் உங்கள் எண்ணங்களை உயர்ந்த இலட்சியங்களுக்காகப் பயன்படுத்துங்கள். எந்தச் சூழ்நிலையிலும் சுயநல எண்ணங்களைச் சுவீகரம் செய்து கொள்ளாதீர்;கள். பொதுநல எண்ணங்களால் உலகில் அமைதியான, அன்பான, அறத்துடன் கூடிய ஓர் அற்புத உலகை உருவாக்குவோம்.

• • •

**யாழ். மாவட்ட ... தொடர்ச்சி ...**

சுன்னாகம் 14, மானிப்பாய் 04, கோப்பாய் 06, கொடிகாமம் 03, சாவகச்சேரி 06, பட்டுக்கோட்டை 05, ஊர்காவற்துறை 07 என முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

18 வயதுக்குட்பட்டோரை அச்சுறுத்தல், துன்புறுத்துதல், காயப்படுத்துதல் மிரட்டுதல், சித்திரவதைக்குட்படுத்துதல், உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தல், பாலியல் ரீதியாக துன்புறுத்தல், பாலியல் ரீதியான தொல்லை போன்ற வன்முறை சம்பவங்களாக இவை காணப்படுகின்றன.

வீடுகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் வன்முறை ஏற்படுத்தப்பட்டமை தொடர்பிலாக 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்களில் பதிவாகியுள்ளது.

குறிப்பாக சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுமிடத்து குறித்த முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்ற சட்டநியதியின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அனைத்திற்கும் உரிய சட்டகோவைக்கு அமைய நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் முதல் அரையாண்டு பகுதிக்குள் சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்த நிலை காணப்படுகின்றது.